விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 18 திங்கட்கிழமை (04.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வட - கிழக்கு எங்கும் 5 நாள் போராட்டம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இசைப்பிரியாவின் படுகொலை மற்றும் இராணுவத்தின் போர்விதி மீறல்களினை கண்டித்து வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மாபெரும் அறவழிப் போராட்டங்களினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கவுள்ளதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அறிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய கடற்படையின் பயிற்சிகள் இன்று கோவாவில்

(புதுடில்லி)

இலங்கை, இந்திய கடற்படையின் கூட்டு பயிற்சிகள் கோவாவை அண்மித்த கடற்பரப்பில் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தப் பயிற்சிகளில் கலந்து கொள்ளும் நோக்கில், கடற்படையின் சமுத்திர கப்பல் இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாககடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகும் இந்த பயிற்சி நடவடிக்கைகள் எதிர்வரும் 8 ஆம் 20-ம் பக்கம் பார்க்க

## இந்தியப் பிரதமர் யாழ். வர வாய்ப்பு

(கொழும்பு)

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் செய்ய முடிவு செய்தால் அவர் வட மாகாணத்துக்கு விஜயம செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வட மாகாணசபைத் தேர்தலை நடத்த உதவிய இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து கடந்த மாத இறுதியில இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வட 19-ம் பக்கம் பார்க்க

## மாநாட்டில் கலந்துகொள்ள மன்மோகன் சிங் முடிவு!

### இறுதி தீர்மானம் விரைவில்

(சென்னை)

தமிழ்நாட்டு அரசியல் தரப்பினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை செல்லலாம் என்று காங்கிரஸ் உயர் மட்டக்குழுவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி, மன்மோகன் சிங்கின் இலங்கை பயணத்துக்கான ஏற்பாடுகளை வெளியுறவுத்துறை அதிகாரிகள் செய்துள்ளனர்.

இந்த நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை செல்வதற்கு மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், ஏ.கே.அந்தோணி, ஜி.கே.வாசன ஆகிய மூன்று பேரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஜி.கே.வாசன் கடந்த வாரம் டெல்லியில் பிரதமர் மன்மேகன் சிங்கை சந்தித்து தன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு மக்களின் மன உணர்வுக்கும் இலங்கைத் தமிழர்களின எதிர்பார்ப்புகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் பிரதமர் இலங்கை செல்லக்கூடாது என்று வாசன் குறிப்பிட்டுள்ளார். 19-ம் பக்கம் பார்க்க

## பத்தாயிரம் இலங்கையர்கள் சவுதியிலிருந்து திரும்பியுள்ளனர்



(ரியாத்)

சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களை வெளியேறுவதற்கு அந்நாட்டு அரசினால் வழங்கப்பட்ட விஷேட பொது மன்னிப்புக் காலம் இன்று முடிவடையவுள்ள நிலையில் பொது மன்னிப்புக்கு உட்பட்ட சுமார் பத்தாயிரம் இலங்கையரும் நாடு திரும்பியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 4 ஆம் திகதி முதல் நவம்பர் 3 ஆம் திகதி வரை இந்த பொது மன்னிப்புக் காலம் அந்நாட்டு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கெனவே சுமார் 16,000 இலங்கையர்கள் சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருப்பதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதுவராலய தகவல்கள் மூலம் அறியமுடிந்தது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் துணை பொது முகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கள ரன்தெனிய, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்துக்குள் அதனைப் பெற தகுதியுடைய சுமார் 10, 000 பேரும் நாட்டிற்கு அழைக்கப்பட்டு விட்டதாகக் கூறினார். 19-ம் பக்கம் பார்க்க

## இனவாத மோதல்களை சில பிக்குகள் தூண்டுகின்றனர்

### அமைச்சர் வீரக்கோன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டை மீண்டும் இருள் சூழ்நத எதிர்காலத்தை நோக்கி கொண்டு செல்லவே சில பௌத்த பிக்குகள் முயற்சித்து வருவதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோன் குற்றம் சுமத்தியுள்ளார்.


கரந்தெனிய பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள, தமிழ், முஸ்லிம் மோதல் ஒன்றை ஏற்படுத்தும் தேவை சிலருக்கு உள்ளது. சில பிக்குமார் சமூகத்தில் பகையுணர்வை பரப்பி வருகின்றனர்.

எனக்கு வழங்கப்படும் வாக்கு பூச்சியமாக குறைந்தாலும் கவலையில்லை 20-ம் பக்கம் பார்க்க

## வடக்கு ஆளுநர் மாற்றப்பட வேண்டும்

### முதலமைச்சரின் கோரிக்கைக்கு அமைச்சர் திஸ்ஸ ஆதரவு



(கொழும்பு)

வட மாகாணத்தில் சிவில் நபர் ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்பதாக சம சமாஜக் கட்சியின் தலைவரும், சிரேஷ்ட அமைசசருமான திஸ்ஸ விதாரண நேற்றுத் தெரிவித் 20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரிட்டன் சனல் 4 தொலைக்காட்சியில் போர்க்குற்ற காணொளி திரையிடப்படுகிறது

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இயக்குநர் கலும் மக்ரே தயாரித்த, **போர் தவிர்ப்பு வலயம் - இலங்கையின் கொலைக்களங்கள்** என்ற ஆவணப் படம் இன்று காலை பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியில் திரையிடப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி **போர் தவிர்ப்பு வலயம் - இலங்கையின் கொலைக்களங்கள்** என்ற ஆவணப்படம் ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் ஏற்கெனவே திரையிடப்பட்டிருந்தது.

இந்த ஆவணப்படத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்த போதிலும், இதில் காண்பிக்கப்பட்டுள்ள பதிவுகள் சர்வதேச சமூகத்தின் அதீத கவனத்துக்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் இளைய மகனான பாலச்சந்திரன் படைத்தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் தடுத்து வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களும் சுமார் 90 நிமிடங்கள் கொண்ட இந்த ஆவணப்படத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆதாரங்கள் இலங்கை அரசாங்கத்தை கடுமையான நெருக்கடிக்குள் தள்ளியிருந்தது.

இப்போரின் போது **தாக்குதல்கள் மேற்கொள்ளக் கூடாத பகுதிகள்** என்று அறிவிக்கப்பட்ட பகுதிகள் மீது படைத்தரப்பினர் நடத்திய தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதை நினைவுபடுத்தும் வகையிலேயே இந்த ஆவணப் படத்துக்கு **போர் தவிர்ப்பு வலயம்** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்தில் இலங்கை படைத்தரப்பின் போர்க்குற்றங்கள் தொடர்பிலான புதிய காட்சிகள், புதிய செவ்விகள் மற்றும் போரின் பின்னணி குறித்த கூடுதல் விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த ஆவணப்படம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த இயக்குநர் கலும் மக்ரே, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான ஓர் உறுதியான ஆவணமாக இந்தப் படம் இருக்கும். இந்தப் போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்த ஆவணப்படம் தூண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அங்கே நடைபெற்ற போர்க் குற்றங்கள் குறித்த புதிய ஆதாரங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. அங்கே என்ன நடந்தது என்பது குறித்த புரிதலை ஏற்படுத்த இது உதவும் என பி.பி.சிக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பிரித்தானியாவின் 41 ஆவது ஆவணப்பட விருதுக்கான இறுதிப் போட்டிக்கு இந்த ஆவணப்படமும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.




இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இரண்டு ஆவணப்படங்களை கலும் மக்ரே ஏற்கெனவே தயாரித்திருந்தமை தெரிந்ததே.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி நிறுவனத்தில் செய்தி வாசிப்பாளராக கடமையாற்றிய இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்ட காணொளி ஆதாரத்தையும் சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## விவசாய அமைச்சர் இன்று முல்லைக்கு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் இன்று முல்லைத்தீவு மாவட்ட விவசாய பயிற்சிக் கல்லூரிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

முல்லை.மாவட்டத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மேற்படி கல்லூரிக்கு சென்று விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதோடு முன்மாதிரி செய்கைக்கான தூறல் நீர்ப்பாசன தொகுதி வழங்கலும் இடம்பெறவுள்ளது.


முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் இவ் வைபவத்தில் ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய், மணலாறு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

இச்சந்திப்பில் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் பிரதம விருந்தினர்களில் ஒருவராக கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் தூர இடங்களிலிருந்து வருகை தரும் விவசாயிகளுக்கு வாகன ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது என முல்லை.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (செ-4-267)

## தனியார்-அரச பேருந்துகள் விபத்து; 8 பேர் காயம்





மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் செட்டிபாளையம் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பயணிகள் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் வண்டியும் மட்டக்களப்பில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டியும் நேருக்கு நேர் மோதியமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி விபத்தில் காயமடைந்தவர்கள் செட்டிபாளையம் பிரதேச வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(செ-4)

## வலி.வடக்கு வீடழிப்பு விவகாரம் முதலமைச்சரின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் உள்ள வீடுகளை இராணுவத்தினர் இடிப்பது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தரவை மீறி இராணுவத்தினரால் வலி.வடக்கில் வீடழிப்பு தொடருவதனாலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இராணுவத்தின் வீடழிப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனூடாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்திற்கு தான் கொண்டு சென்றுள்ளதாக வலி.வடக்கு துணைத் தவிசாளர் ச.சஜீவன் தெரிவித்தார்.

இராணுவக் குடும்பங்களை குடியமர்த்துவதற்காக வலி.வடக்கில் உள்ள வீடுகள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருகின்றன.

இவ் வீடழிப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவிற்கு வீடழிப்பை நிறுத்துமாறு ஜனாதிபதியால் உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் அவரது உத்தரவின் பின்பும் வலி. வடக்கில் வீடழிப்பு இடம்பெறுவதாக அப்பிரதேச செயலரினால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வலி.வடக்கு மக்கள் தமது பிரச்சினை தொடர்பில் நேரடியாக முறையிடவுள்ளனர்.

இராணுவத்தினரின் வீடழிப்பு நடவடிக்கை தொடர்வதால் சில தினங்களில் அனைத்து வீடுகளும் அழிக்கப்படும் அபாயமுள்ளது என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் முகாமில் இடம்பெயர்ந்து வாழ்கின்ற குடியேற்றவாசியொருவர் தெரிவிக்கையில்,

நாம் எமது குடும்பத்தோடு காலா காலமாக வாழ்ந்த வீடுகள் எமது கண் முன்னே அழிக்கப்படுகின்றமை எமக்கு நெஞ்சில் துன்பத்தை தருகின்றது.

இவ்வீடுகள் அழிக்கப்படுவதனால் எம் நிலத்தில் குடியேறுவோம் என்ற நம்பிக்கை சிறிது சிறிதாக அழிக்கப்பட்டே வருகின்றது என்றார்.

இவ் வீடழிப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டமும் செய்யத் தயங்க மாட்டோம் எனவும் அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு மீனவ இயக்கங்கள், அரசியல் கட்சிகளின் குடியேற்ற குழுக்கள் என்பன ஆதரவு வழங்க தயாராகவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் பகல் வேளை வலி.வடக்கில் வீடழிப்பை இடைநிறுத்தியுள்ளபோதிலும் மீண்டும் வீடழிப்பு நடவடிக்கை தொடருமானால் மாற்று நடவடிக்கை தொடர்பில் சிந்திக்க வேண்டி வரும் எனவும் துணை தவிசாளர் குறிப்பிட்டார்.(அ-4)

**விற்பனையாகிறது**
16/12/2014 வரை
**சனி மாற்றப் பலாபலன்கள்**
**சோதிடர்**
**V.A. சிவராசா**
**56, அம்மன் றோட், கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்**
**021 222 8708**
(4405)

**விற்பனைக்கு**
*சிவப்பு நிற PULSAR 150 CC (கம்பி மொடல்) விற்பனைக்குண்டு. 1 லீ- 55Km*
**விலை: 75,000/-**
**தொடர்புகளுக்கு: 077 322 1545**
(4413)

## வாவியில் மூழ்கி சகோதரர்கள் பலி

அக்கரைப்பற்று பனங்காடு பாலத்தின் கீழுள்ள வாவியில் மூழ்கி சகோதரர்கள் இருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உயிரிழந்துள்ளனர்.

வாவியினுள் வீழ்ந்த தலைக் கவசத்தை எடுப்பதற்காக வாவியில் இறங்கிய தம்பியை காப்பாற்ற முற்பட்டபோதே அண்ணனும் தம்பியும் வாவியில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

ஆலையடிவேம்பு நாவற்காட்டு கோபால் கடை வீதியை சேர்ந்த 24 வயதுடைய ஞானசேகரம் ஜனார்த்தன் மற்றும் 21 வயதுடைய தினேஸ் என அழைக்கப்படும் ஞானசேகரம் ஜெயந்திவாசன் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

பாலத்தில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது தலைக்கவசம் வாவியில் வீழ்ந்துள்ளது. இதனையடுத்து தம்பியார் வாவியில் குதித்து தலைக்கவசத்தை எடுக்க முற்பட்டுள்ளார். இதனை அவதானித்த அண்ணன் தம்பியை காப்பாற்ற வாவியில் குதித்துள்ளார். இதனால் இரண்டு பேரும் நீரில் மூழ்கியுள்ளனர்.

மீனவர்களின் உதவியுடன் தம்பி மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் தம்பியை காப்பாற்ற வாவியில் குதித்த அண்ணன் காணாமல் போயுள்ள நிலையில் பின்னிரவு ஒரு மணியளவில் சடலமாக பாலத்துக்கு அருகாமையில் மீட்கப்பட்டார்.

சம்பவத்தில் உயிரிழந்த இருவரது சடலமும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-4)

# இன்று ஒரு தகவல்

## பரதன்...

"என்னை யாரும் சரியாக புரிந்துகொள்கிறார்களில்லை சார்!'' என்றார் ஒருவர். ''இராமாயணத்தில் வரும் பரதனையே யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே'' என்றேன்.

"என்ன சார் திடீரென்று இராமாயணத்துக்குப் போய் விட்டீர்கள்'' என்றார். இதோ பாருங்கள்! என்று எனக்கு வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தை அவரிடம் காட்டினேன். அதில் இதைப்பற்றி அவர் எழுதியிருந்தார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் கூட சந்தர்ப்ப சூழ்நிலைகள் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்துவிடும். இராமாயணத்திலேயே ஒரு சிறந்த கதாபாத்திரம் – பரதன். அப்படிப்பட்ட பரதனை அவனுக்கு நெருக்கமாக இருந்தவர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஏன், பெற்றதாயே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை! புரிந்து கொண்டிருந்தால் என் மகனுக்கே பட்டம் சூட்ட வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்டிருப்பாரா?

இது தன் பிள்ளைக்கு பிடிக்காது என்பது அந்தத் தாயாருக்குத் தெரியவில்லை! எல்லாவற்றையும் கேள்விப்பட்டு அவன் வந்து திட்டும் போதுதான் அவன் எப்படிப்பட்டவன் என்பது அவருக்குப் புரிகிறது! சரி... அப்பாவாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டாரா?

அதுவும் இல்லை!

அண்ணன் இருக்கும் போது தம்பி அரசாள விரும்புவானா என்ற விடயம் அவருக்குத் தெரியவில்லையே! தெரிந்திருந்தால் வரம் கேட்ட மனைவியிடம் ''நீ எனக்கு மனைவியில்லை'' என்று சொன்னதோடு நிறுத்தாமல் ''உன்மகன் பரதன் எனக்கு மகனல்ல!'' என்று வேறு சொல்லிவிட்டாரே!

சரி... அமைச்சர்களாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டார்களா? அதுவுமில்லை! தந்தையின் மறைவு அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை! மாமன் வீட்டிலிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பி வரும் போது அவரிடம் என்ன.. முடிசூட்டுவிழா ஏற்பாட்டைச் செய்யலாமா? என்று கேட்கிறார்கள்.

பரதனை குகன் கூட சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இவன் தாயை வெறுத்து கோபமாகப் பேசிவிட்டு மரவுரி தரித்து அண்ணனைப் பார்ப்பதற்காக காட்டுக்கு வரும் போது அவனைத் தவறாகப் புரிந்துகொண்டு அவனோடு சண்டையிடத் தயாரானான். இராமன், இலட்சுமணனாவது பரதனைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா?

பரதனைக்கண்ட இலட்சுமணன் கோபப்படுகிறான். இராமர் அவனைச் சாந்தப்படுத்தி பரதனைக் கூப்பிட்டு, "தம்பி... அரசாட்சி உனக்குச் சுகம் தருகிறதா?'' என்று கேட்கிறார். அவனைப் புரிந்துகொண்டிருந்தால் அப்படிக் கேட்டிருப்பாரா? இப்படிப் பலராலும் புரிந்துகொள்ள முடியாமல் போன பரிதாபத்துக்குரிய குணச்சித்திரம் தான் பரதன்.

ஆனால் பரதனைப் புரிந்துகொண்ட சிலரும் இராமாயணத்தில் உண்டு. பரதனைக் கண்ட குகன் யுத்தத்துக்குத் தயாராகும் போது, வேடர்களையெல்லாம் போருக்கு வருமாறு அழைக்கிறான். அவர்களெல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மௌனமாக இருக்கிறார்கள். குகனுக்கு கோபம் வந்தது. "ஏன் இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கேட்கிறான். அதற்கு அவர்கள்,

"தலைவா! பரதனைப் பார்த்தால் சண்டைக்கு வருபவன் மாதிரித் தெரியவில்லையே! இவனும் இராமன் மாதிரி மரவுரி தரித்து தவக்கோலத்தில் அல்லவா வருகிறான்... இவன் எப்படி இராமனுக்கு எதிரியாக இருக்க முடியும்?'' என்கிறார்கள்.

விடயம் தெரிந்தவர்களாலேயே சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பாமர மனிதர்களான வேடர்கள் ஒரு பார்வையிலேயே புரிந்துகொண்டார்கள் பார்த்தீர்களா! என்று என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருந்தவரிடம் சொன்னேன். அவர் ''சார்... இப்ப நீங்கதான் என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை!'' என்றார். "என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.

"இவ்வளவு விபரமும் உங்களுக்கு எழுதி அனுப்பிய வாசகரே நான்தான் சார்... என்னிடமே கதை அளக்கிறீர்களே!'' என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# காணாமற் போனோர் தொடர்பில் முறைப்பாடு செய்ய காலநீடிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை முறைப்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பில் கடந்த 30ஆம் திகதி வரையிலேயே முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இதற்காக மேற்படி காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பில் பொது மக்கள் சென்றடையும் வகையான சில அறிவித்தல்கள் மேற்படி ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியான மக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவின் தலைமையில் திருமதி திமிங்கு படதுருகே பிரியந்தி சுரஞ்சனா வித்தியா ரத்ன, திருமதி மனோ இராமநாதன் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கும் இவ் ஆணைக்குழு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காணாமற்போன, கடத்தப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு கடத்தப்பட்டு காணாமற் போனமையை நிரூபிக்க போதுமான சான்றுகள் தொடர்பிலும் அவ்வாறு கடத்தப்பட்ட, காணாமற் போன சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

மேலும் மேற்படி கடத்தல், காணாமல் போன சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக கருதுவதற்கான சான்றுகள், அவ்வாறு பொறுப்புக் கூற வேண்டுமென அடையாளம் காட்டப்பட்டவருக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இவ் ஆணைக்குழு ஆராயவுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றோடு இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதை தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் மேற்படி கடத்தப்பட்ட, காணாமற் போனவர்களது பெற்றோர் அல்லது வாழ்க்கைத்துணை மற்றும் தங்கி வாழ்வோருக்கு அரசாங்கத்தின் ஒரு பொறுப்பென்ற வகையில் வழங்கப்பட வேண்டிய நிவா ரணங்கள் தொடர்பிலும் இவ் ஆணைக்குழு ஆராயவுள்ளது.

இதேவேளை மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்படுவதாயின் செயலாளர், காணாமற் போன வர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு, இல. 9/8, சுரனிமல இடம், கொழும்பு–06 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் முறைப்பாடுகளை தமிழிலோ, சிங்களத்திலோ அல்லது ஆங்கிலத்திலோ வழங்க முடியும் எனவும் மேற்படி காணாமற் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மேலும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் யாவும் பரிசீலனை செய்யப்பட்ட பின் முறைப்பாட்டாளர்கள் வாய்மொழி விசாரணைக்காக அழைக்கப்படுவதுடன் முறைப்பாட்டாளர் களின் வசதிக்கேற்ப மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், கிராம சேவையாளர் அலுவலகம் அல்லது வேறு பொருத்தமான ஒரு இடத்தில் விசா ரணை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் அதற்கான திகதி மற்றும் இடம் என்பன உரிய காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் இரகசியமான முறையில் சாட்சியளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை ஆணைக் குழு ச்சட்டத்தில் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவிற்கும் பொருந்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 140 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 80 |
| கோவா | 40 | 40 | 70 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 45 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 160 |
| பாகற்காய் | 240 | 110 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 30 | 60 |
| பயற்றங்காய் | 120 | 90 | 120 |
| லீக்ஸ் | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 80 |
| போஞ்சி | 120 | 100 | 140 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 30 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 - 50 |

# இராசி பலன்

04.11.2013
(ஐப்பசி 18, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பிரதமை காலை 5.34 மணிவரை
விசாகம் முன்னிரவு 11.29 மணிவரை
இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை
சுபநேரம் 12.04 - 1.34 மணிவரை
கந்தசஷ்டி விரதாரம்பம்

**மேடம்** வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியென்று வந்து சேரலாம், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், பொருட் சேர்க்கைக்கு அத்திபாரமிடுவீர்கள், உடல் நலம் சீராகும்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக நல்ல முடிவெடுப்பீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள்.

**மிதுனம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பிள்ளைகள் நலன் கருதி சில செலவ்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்** தொல்லை தந்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வருவர், சுப நிகழ்வுகள் மனையில் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**சிங்கம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**கன்னி** பணியாளர் தொல்லை அகலும், இனிய தகவல்கள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மாதர் நட்புண்டு, சில விவாதங்க்ள் ஏற்படலாம், சுப செலவுகள் கூடும்.

**துலாம்** பக்குவமாகப்பேசி காரிங்களைச் சாதித்துக்கொள்வீர்கள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், பயணங்கள் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், பிதா சிந்தையுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், கௌரவம், அந்தஸ்து உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு, தொழில் நன்மைகருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, உடல் நலனில் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்கள் தாமதமாகும்.

வளவன்




# கசினோ என்றால்?

கெசினோ என்பது சுகபோக ஹோட்டல்கள், விடுதிகள் மற்றும் ஆடம்பரக் கப்பல்களின் அனைவராலும் பெரிதும் விரும்பப்படும் உல்லாசப் பகுதியாகும்.

இங்கு செல்வந்தர்களின் நடமாட்டமே அதிகமாகக் காணப்படும். இதனுள் குறித்த சிலர் சூது மற்றும் பந்தயம் கட்டுதலிலும் ஈடுபடுவார்கள். இதன் மூலமாக மேலும் செல்வந்தர்களாக முற்படுகிறார்கள்.

சூது, பந்தயம் பிடித்தல் என்பவற்றுக்கு அப்பால் இங்கு மதுபானக் கடைகள் மற்றும் பாலியல் சுகங்கள்ளை அனுபவிக்கக் கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும் உலக நாடுகள் தங்கள் நாடுகளின் புறநகரங்களிலேயே கசினோ மையங்களை திறக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையிலும் கசினோ

தற்போது கசினோ பற்றிப் பரவலாக பேசப்படுகிறது. ஆனால் ஏற்கெனவே டி.ஆர்.விஜயவர்த்தன வீதியில் அனுமதியுடன்கூடிய பத்து கசினோ நிலையங்கள் கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இவற்றில் அதிகளவில் ஈடுபடுவது வெளிநாட்டவர்கள் அல்ல, மாறாக கொழும்பினை மையமாகக் கொண்ட செல்வந்தர்களே!

### கொழும்பில் கசினோ மையம்

2010ஆம் ஆண்டு கசினோ சட்டத்திற்கு அமைய கொழும்பு டி.ஆர். விஜயவர்த்தன வீதி கசினோ வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு கசினோ வலயத்தின் பிரதான கட்டமைப்புக்கு அமைச்சரவையால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் முதலீட்டு சபை மற்றும் நிறுவனமிடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.



ஜேம்ஸ் பார்க்கரின் கிரவுன் கசினோ மொத்த முதலீடு 350 மில்லியன் அமரிக்க டொலர் ஆகும்.

400 அறைகள் நவீன வசதிகளுடன் கூடிய ஹோட்டல்கள், கடைத் தொகுதிகள் ஆகிய உள்ளடங்கிய முழுமையான கசினோ வலயத்தில் 2600 பேர் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வர்.

இலங்கை முதலாவது கசினோ வலயம் பேரே வாவியைச் சுற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் வியாபாரம் ஜோன் கிரன் போபடிஸ் நிறுவனத்தால் கொழும்பு-2 கிலேனி ஒழுங்கையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வியாபாரத்தின் முதல் கட்ட முதலீடாக 650 மில்லியன் அமெரிக்க டொலரும் இரண்டாம் கட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலருமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பகுதியில் வியாபாரக கலந்துரையாடல்கள் மற்றும் கண்காட்சிகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்படும். இவை அனைத்துக்கு மான பொதுப் பெயரே கசினோ என்பதாகும்.

கசினோ வலயங்களில் பெரும்பாலும் சஞ்சரிப்பவர்கள் செல்வந்தவர்களாவர். சாதாரண மக்கள் இவ்வலயத்திற்கு செல்லமாட்டார்கள். ஆகையால் இவ்வலயம் செல்வந்தர்களின் வருகையை அடிப்படையாகக்கொண்டே உருவாக்கப்பட்டது.

இதற்குள் ஹோட்டல்கள், ஆய்வு அரங்கங்கள், அடுக்கு மாடி வீடுகள், ஓய்வாகப் பொழுதைக் களிப்பதற்கும் பந்தயம் பிடித்தல் ஆகிய காரணிகள் உள்ளடங்குகின்றன என இலங்கை முதலீட்டுச் சபை அறிவித்துள்ளது.

இவ்விரு வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பூமியினுள் கிரிஷ் நிறுவனமும் செயற்படுகிறது.

இத்திட்டத்தின் அடிப்படையில் அடுக்குமாடி வீடுகள், ஹோட்டல்கள் போசனசாலைகள் கட்டப்படவுள்ளன. இதற்காகத் தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ் அனைத்து முதலீட்டுத் திட்டங்களையும் 45 ஆண்டுகள் காலப் பகுதியினுள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.




ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய முதலீடுகளை காண்பவர்கள் இவையனைத்தும் ஒரே வலயமாகவே எண்ணுவார்கள்.

இப் பாரிய கட்டங்களிடையே சிதறிக் காணப்படுகின்ற சின்னஞ்சிறிய தொன்மையான கட்டிடங்களையும் அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் வாவியைச் சுற்றி புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்கள் மூலமாக இலங்கையிலும் கசினோ வலயம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டதென அனைவரும் அறிந்துகொள்வார்கள்.



### கசினோ முன்னேற்றத்திற்கு வழிகாட்டியா?


கசினோ மூலமாக ஓர் நாட்டினை முன்னேற்ற முடியுமா என்றால் விடை ஆம என்பதாகும்.

அதற்காக கசினோ வியாபாரம் முன்னெடுக்கப்படும் ஓர் நாட்டினுள நீதி மற்றும் நல்லாட்சி முன்னெடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். உலக நியதியின் அடிப்படையில் கசினோ வியாபாரம் மூலமாக நாட்டிற்கு அதிகளவு செல்வம் ஈட்டும் நாடாகச் சிங்கப்பூர் விளங்குகிறது.

சிங்கப்பூரினுள் பிரதானமாக இரண்டு கசினோ நிலயங்கள் உள்ளன.

அவை இரண்டும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவது மக்காவோ அரசுக்கும் அமெரிக்காவின் லாஸ்வெகாஸ் ஆகிய இரு முன்னணி கசினோ வலயங்களுக்கு மாத்திரமேயாகும்.

அமெரிக்காவின் லாஸ்வெகாஸ நகரினுள் கசினோ மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச் செயல்கள் இடம்பெற்றாலும் சிங்கப்பூர் தன் கசினோ வியாபாரத்தினுள் இத்தடைகளை வெற்றிக் கொண்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.



அவர்களின் பிரதான கசினோ வியாபாரத்தினுள் அநியாயம், களவு ஆகியவற்றுக்கு இடமில்லை.

ஆனால், இலங்கையில் இது தொடர்பான நிலையான சட்டவரை முறைகள் இல்லை. இருந்தாலும் அது செயற்படும் நிலையிலும் இல்லை. செயற்பட்டாலும் அந்தஸ்து, தராதரம் அடிப்படையிலேயே செயற்படும்.

இதனால்தான் இங்கு கசினோவுக்கு எதிர்ப்பு பலமாகவே இருக்கிறது.



# 'வர்த்தகத்திற்கு உகந்த நாடு' இலங்கை 85ஆவது இடத்தில்

சர்வதேச அளவில், மிகச் சுலபமாக வர்த்தகம் புரியக் கூடிய 189 நாடுகளின் பட்டியலை, உலக வங்கி வெளியிட்டுள்ளது. இதில், சிங்கப்பூர் முதலிடத்தை பிடித்துள்ளது. இலங்கை 85 ஆவது இடத்தில் உள்ளது.

அதே சமயம் வர்த்தக சூழலை மேம்படுத்துவதில் 114 நாடுகள் கடந்த ஆண்டை விட நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன.

இதர ஆசிய நாடுகளான சீனா 40 இடங்கள் முன்னேறி 96-வது இடத்தையும் பாகிஸ்தான் 110-வது இடத்தையும் பிடித்துள்ளன. இந்த பட்டியலில் நேபாளம் 105-வது இடத்தையும், வங்கதேசம் 130-வது இடத்திற்கும் தேர்வாகி உள்ளன. இந்தியா 134-வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

உலக வங்கியின் பட்டியலின் படி முதல் 10 இடங்களில் சிங்கப்பூர், ஹாங்காங், நியூசிலாந்து, அமெரிக்கா, டென்மார்க், மலேசியா, கொரியா, ஜோர்ஜியா, நோர்வே, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை நடப்பாண்டில், இந்தியாவை விட பிரிக்ஸ நாடுகள் என்று அழைக்கப்படும் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்ரிக்கா ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் வர்த்தகம் புரிவது மிகக் கடுமையானதாக உள்ளது என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,948.75 | 5,954.36 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3280.48 | 3280.33 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,568.95 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** லங்கா சென்சுரி(W)(0.60),ஹெரண்டிப் என்ஜி.(180.10), லங்கா சென்சுரி(W)(1.60),எஸ்எம்பி லீசிங்(X)(0.50),ஒபிஸ் ஈகுப்மண்ட்(2694.80),

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** செரன்டிப் லான்ட்( 1202.30), கலமசு (1100.00), சிஜரி( 115.10), எஸ்எம்பி லீசிங்(0.80), யூனியன் கெமிக்கல் (373.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.31 | 132.57 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.55 | 213.08 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.09 | 180.36 |
| சுவிஸ் பிராங் | 141.37 | 146.96 |
| கனேடிய டொலர் | 123.23 | 127.80 |
| அவுஸ்திரேலிய டொலர் | 121.49 | 126.41 |
| சிங்கப்பூர் டொலர் | 103.52 | 107.22 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.62 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# சீனாவின் முதலீட்டுடன் கொழும்பில் துறைமுக தலைநகரம் அமைக்கப்படும்

## டிசெம்பர் மாதத்தில் வேலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

**கொழும்பு கடற்கரையில் 1.43 பில்லியன் அமெரிக்க டொலரில் கட்டப்படவுள்ள துறைமுக நகரத்தின் அபிவிருத்தித் திட்டமானது, டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தின் போது அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் டிசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் அண்மையில் தெரிவித்துள்ளனர்.**

230 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படவுள்ள துறைமுக நகரத்திற்கான திட்டமானது 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டிற்குள் முதலீடு செய்வதை நோக்காகக் கொண்டு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது.

230 ஏக்கர் நிலப்பரப்பில் துறைமுக நகரம் ஒன்றைக் கட்டுவதற்கான உடன்படிக்கை ஒன்றை முன்னதாகவே இலங்கை துறைமுக அதிகார சபையுடன் சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனமானது மேற்கொண்டுள்ளது.

39 மாத காலங்களைக் கொண்ட இத் திட்டத்தில் பூங்காக்கள், குடியிருப்புக்கள், அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன அமைக்கப்படவுள்ளதாக துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.

சீன நிறுவனம் ஒன்றால் விரிவுபடுத்தப்படும் கொழும்புத் துறைமுகத்துடன் இணைந்ததாகவே தற்போது துறைமுக நகரம் அமைக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி பெறப்பட்டால் டிசெம்பர் மாதத்தில் இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என திட்ட இயக்குநர் சுசாந்த அபேசிறிவர்த்தன ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையிடமிருந்து அனுமதியைப பெற்ற பின்னர், இத்திட்டத்துடன் தொடர்புபட்ட உடன்படிக்கைகளில் நாங்கள் கைச்சாத்திடுவதுடன், டிசெம்பர் மாதத்தில் துறைமுக நகரத்தைக் கட்டுவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்படும்.

இதற்கான ஆரம்பப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என திட்ட இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை மேற்கொள்வதற்கு தேவையான 230 ஏக்கர் நிலப்பரப்பும் சீன நிறுவனத்திடம் 99 ஆண்டுகாலக் குத்தகையில வழங்கப்படவுள்ளது என துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதி அமைச்சர் றோகித பொகலகாம ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

உள்நாட்டு யுத்தமானது 2009இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், நாட்டின நெடுஞ்சாலைகள், தொடரூந்துப் பாதைகள், நிலக்கரி மின்சக்தி ஆலை, விமான நிலையம், துறைமுகம் போன்ற பல்வேறு பாரிய திட்டங்களுக்காக சீனாவானது 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளதுடன், போருக்குப் பின்னான இலங்கையின் அபிவிருத்தியில் சீனா மிகப் பெரிய முதலீட்டாளராக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஊடக அமைச்சின் திட்டத்தை நிராகரித்தார் ஜனாதிபதி

பொதுநலவாய மாநாட்டில் 15 வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிக்க தடைவிதிப்பதற்கு இலங்கை ஊடகத்துறை அமைச்சு முன்வைத்த திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிராகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அச்செய்திக் குறிப்பில் இலங்கைக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வரும் 15 வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பெயர்களை கொண்ட கறுப்புப்பட்டியல் ஒன்றை, ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தயாரித் திருந்தார்.

இவர்களை குறித்த மாநாட்டில் பங்கேற்க அனுமதி மறுக்கும் திட்டம் குறித்து ஜனாதிபதியிடம் கெஹலிய ரம்புக்வெல எடுத்துக் கூறியிருந்தார்.

அந்த கறுப்புப்பட்டியலை வாங்கிப் பார்வையிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அனைவரையும் பொதுநலவாய் மாநாட்டில் பங்கேற்க அனுமதிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

அவர்களை அனுமதிக்காதுவிடின் மிகப் பெரியளவிலே அவர்களால் பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்றும், கெஹலிய ரம்புக்வெலவிடம் மகிந்த ராஜபக்ச, சுட்டிக்காட்டியுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல கையளித்த அந்த கறுப்புப்பட்டியலில் சனல் 4 தொலைக்காட்சியில் இலங்கையின் போர்க்குற்றங்களை அம்பலப்படுத்திய, கெல்லம் மெக்ரேயின் பெயரும் இடம்பெற்றுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# பேர்த் நகரில் குர்ஷித்தை சந்தித்தார் ஜீ.எல்.பீரிஸ்

இலங்கை- இந்திய வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் அவுஸ்திரேலியாவின் பேர்த்நகரில் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு இலங்கையில் நடைபெறவுள்ள நிலையில் குறித்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கு பெறுவது இன்னமும் உறுதி செய்யப்படாத நிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்து சமுத்திர ரிங் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட போதே இந்திய இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் இருவரும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (அ-2)

# வாக்காளர் பதிவேடு விண்ணப்பம் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

## உதவித் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேட்டிற்காக விண்ணப்பித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் மேற்கொளளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேடுகள் பிராந்திய தேர்தல் அலுவல கங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து அதுதொடர்பிலான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்காக அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, வாக்காளர் பதிவேட்டிற்கான மேன்முறையீடுகளை விண்ணப்பிப்பதற்கு நவம்பர் 13 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகள் கிடைத்ததும், அவை குறித்தும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் பதிவேட்டை தயாரிப்பதற்கு எண்ணியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1973 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா : 18.75<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2434 | பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 2 செவ் 2 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: நுண்கலைமாணி ஆசிரியர்<br>தொ.இ: G/2497 |
| பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா : 23.5<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: முதுகலைமாணி ஆசிரியர்)<br>தொ.இ: B/2435 | பிறப்பு: 1981 NRC (NA)<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L கணனி இயக்குநர்<br>தொ.இ: G/2500 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா :16 சூரி செவ் 5ல்<br>உயரம்:181 cm<br>தகைமை/தொழில்: -தேசிய டிப் ளோமா ஆசிரியர்<br>தொ.இ: B/2436 | பிறப்பு: 1986 இந்து சைவகுருக்கள் (செட்டி)<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: College of Education<br>தொ.இ: G/2508 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா : 40.25 செவ் 12 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc,MBA நிறைவேற்று அதிகாரி (வங்கி)<br>தொ.இ: B/2437 | பிறப்பு: 1969 இந்து (குருகுலம்)<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: O/L,<br>தொ.இ: G/2512 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# காசோலை மோசடி அதிகரிப்பு; அவதானமாக இருக்க கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் மீண்டும் காசோலை மோசடிகள் அதிகரித்து வருவதனால் வர்த்தகர்களை அவதானமாக இருக்குமாறு யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.


காசோலை மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் பொறுப்பதிகாரி மேலும் தெரிவிக்கையில், காசோலை மோசடிகள் மற்றும் நம்பிக்கை மோசடிகள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாகவர்த்தக நிலையங்களில்காசோலை மோசடிகளும் உறவினர்களுக்கிடையில் நம்பிக்கை மோசடியும் இடம்பெற்று வருகின்றது.

வர்த்தக நிலையங்களுக்கு கடன டிப்படையில் பொருட்களை வழங்கி விட்டு பின்னர் அதற்கான பணத்தை மீளப் பெறும்போது வர்த்தகர்கள் பணத்திற்கான காசோலையை வழங்குகின்றனர்.

காசோலையைப் பெற்றுக்கொண்டவர்கள் வங்கியில் காசோலையை மாற்றும் போது காசோலை திரும்பிவிடுகின்றது. இதனால் ஏமாற்றப்பட்ட விநியோகத்தர்கள் வங்கிகளில் முறையிடுகின்றனர்.

ஆகையால் இதுவிடயத்தில் வர்த்தகர்கள் நியாயமாக செயற்பட்டு தமது உண்மைத் தன்மையையும் நியாயத் தன்மையையும் பேண வேண்டும். இதனைவிட நம்பிக்கையடிப்படையில் பெறப்படும் ரொக்கப் பணத்தையோ நகைகளையோ அதே நம்பிக்கையில் திரும்ப வழங்க வேண்டும். எனவே இது விடயத்தில் பொதுமக்களும் வர்த்தகர்களும் நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படல் வேண்டும் என்றார். (அ-4)



# வலிகாமம் வடக்கில் புதிய கட்டடங்கள்; இராணுவத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வலிகாமம் வடக்கின் காணி பிரச்சினைகள் தொடர்பில் இரண்டாயிரம் வழக்குகள் நீதிமன்றில் நிலுவையிலுள்ள நிலையில் இராணுவத்தினர் பிரச்சினைக்குரிய காணிகளில் வீடுகளை இடித்து விட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது என சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் குணரட்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.**

வலிகாமம் காணி வழக்கு தொடர்பான மனுக்களைநீதிமன்றம் விசாரணைக்குஎடுக்கும் போது நீதிமன்றுக்கு எதிராக இராணுவம் நடந்துள்ளமைக்கான ஊடக அறிக்கைகள் மற்றும் புகைப்படங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை வலிகாமம் காணி உரிமையாளர்கள் தமது காணி உரிமைகள் தொடர்பில் நீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கும் நிலையில் அந்த காணியில் ஒரு பகுதியில் இருக்கும் வீடுகளை கடந்த வாரம் இராணுவம் இடித்து தரைமட்டமாக்கியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியது.

இதனையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இடையிலான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து இராணுவம் தனது நடவடிக்கைகளை நிறுத்தியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியையும் மீறி இராணுவத்தினர் சர்ச்சைக்குரிய நிலத்தில் வீடுகளை இடிக்கும் நடவடிக்கைகளை தொடர்வதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் மேற்படி காணிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சட்ட ரீதியாக சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் காணி உரிமையாளர்கள் அதற்கு சவாலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# இசைப்பிரியா விவகாரத்தில் சுயாதீன விசாரணை வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை

பொதுநலவாய மகாநாட்டில் பங்கு கொள்வதற்காக உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ள வேளையில் சனல் 4 தொலைக்காட்சி போர்க்குற்றம் தொடர்பாக வெளியிட்டிருக்கும் இசைப்பிரியா படுகொலை தொடர்பான ஒளிப்படக்காட்சிகள் உலக நாடுகளை மட்டுமல்லாது உலக நாடுகளெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி தெரிவித் துள்ளதுடன் இவ் விவகாரத்தில் சுயாதீன விசாரணை வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரியுள்ளது.

அக் கட்சி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அத் தொலைக்காட்சி இசைப்பிரியாவை உயிருடன் இராணுவத்தினர் கைது செய்த காட்சியை ஒளிப்பரப்புச் செய்துள்ளமை தமிழ் மக்களை எரிச்சலடையச் செய்துள்ளது. நம்பிக்கைகளைத் தகர்த்து போகச் செய்துள்ளது. மனிதநேயமுள்ளவர்களை உலுப்பியுள்ளது.

தற்போது வெளியாகிவரும் இசைப்பிரியா கைது செய்யப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டிருப்பதான செய்திகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

சுயாதீனமான விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் அடையாளம் காணப்படின் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதுவே இறுதி யுத்தம் தொடர்பாக தமிழ் மக்களிடம் எழுந்திருக்கும் படுகொலைகள் தொடர்பான அச்சங்களுக்கும் சந்தேகங்களுக்கும் விடை காண்பதாக அமையும்.

தமிழ் மக்களிடையே எழுந்திருக்கும் சந்தேகங்களுக்கும் அச்சங்களுக்கும் நியாயமும் பரிகாரங்களும் காணப்பட வேண்டும். ஆகவே எமது கோரிக்கைக்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கையை எடுத்து விரைவில் உண்மையை உலகுக்கு தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கின்றோம் என அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



**தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தின விழா அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உட்பட விருந்தினர்கள் நாளைய தலைவர்கள் சிறப்பு நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்களுடன் நிற்பதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)**

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலைதூக்கும் டெங்கு?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீண்டும் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் உள்ளமையால் பொதுமக்கள் அனைவரையும் அவதானமாக இருக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை தொற்று நோய்த்தடுப்பு பிரிவு எச்சரித்துள்ளது.

கடந்த வருடம் சுமார் 650 பேர் வரையிலான டெங்கு நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தில் இம்மாதம் வரை சுமார் 450 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது கிராம, நகர வேறுபாடின்றி அனைத்து இடங்களிலும் அதிகரித்து காணப்படுகின்றது. குறிப்பாக பிரதேச ரீதியாக டெங்கு நோயின் தாக்கம் மாறுபட்டு காணப்படுகின்றது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோயின் தாக்கம் திடீரென அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.

எனவே அவர்கள் தமது வீடுகளில் உள்ள நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு மழைநீா தேங்காத வகையில் அவற்றை அழித்து விடுவதன்மூலம் எங்களை நாமே டெங்கு தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதனைவிட காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும் எனவும் தொற்று நோய்ப்பிரிவு அறிவித்துள்ளது. (அ-4)




# அரியாலை கிழக்கு வீதியை புனரமைக்குக

(பருத்தித்துறை)

அரியாலை கிழக்குப் பகுதியிலுள்ள 10 கி.மீ. வரையான பிரதான வீதி கடந்த பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவ்வீதியால் பயணிப்போர் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பிரதான வீதியுடன் இணையும் குறுக்குவீதிகள் அனைத்தும் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வீதி மட்டும் புனரமைப்பில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடந்த 4 வருடங்களாக மீள் குடியேறிய மக்கள் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-10)

# சந்திரிகாவுடன் இணைந்து தேர்தல் நடவடிக்கைகள்

## ஆலோசிக்கிறார் பொன்சேகா

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து கலந்தாலோசித்து வருவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படுமென அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையிலேயே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஊழல் நிறைந்திருக்கிறது. வீதி அபிவிருத்தி உட்பட அனைத்து வேலைத் திட்டங்களிலும் நிதி கையாடல் அதிகரித்துள்ளது. மக்களின் வரிப்பணம் சிலரது பைகளைச் சென்றடைகிறது.

தனிப்பட்டவர்களின் நன்மைகளுக்காக பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன. சட்டம், ஒழுங்கு என்பன சீரழிந்துள்ளன.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நன்மதிப்பும் குறைந்து வருகிறது.

எனவே, அக்கட்சியைப் பாதுகாப்பதற்காக பல்வேறு அதிரடித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் சந்தித்த போது என்னிடம் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது அரச அமைச்சர்கள், உறுப்பினர்களில் பலர் தன்னுடன் இணைந்து செயற்பட உறுதியளித்துள்ளதாகவும் சந்திரிகா கூறினார்.

என்னுடன் இணைந்து அடுத்த வருடம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான விசேட முன்னெடுப்புக்களை தானும் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகத்தை மீட்பதற்கான எனது நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுமாறு முன்னதாகவே நான் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தேன்.

தற்போது இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் நாம் இருவரும் நடத்தி வருகிறோம்.

எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்து பல்வேறு திட்டங்கள் எம்மிடம் உள்ளன. விரைவில் எங்களது பலத்தை நாம் வெளிப்படுத்துவோம் என்றார். (அ-2)

## சிறுவர் இல்லங்களில் ஆய்வுகள் நடத்த ஏற்பாடு

நாடளாவிய ரீதியில் சிறுவர் இல்லங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர் இல்லங்களின் தரம் மற்றும் அங்குள்ள பிள்ளைகளின் நிலைமை குறித்து இதன் போது கூடுதல் கவனம் செலுத்தப்படும என நனடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைககள ஆணையாளர் யமுனா பெரேரா தெரிவிததுள்ளார்.

இந்த ஆய்வுகளின் மூலம் சேகரிக்கப்படும் தரவுகளுக்கு அமைய உரிய தரத்தை கொண்டிராத சிறுவர் இல்லங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களததின ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இல்லங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பின் அவர்களை விடுவிக்க விசேட வேலைத்திட்டங்களும மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் நீண்ட காலமாக சிறுவர் இல்லங்களில் தங்கியிருப்பவர்கள் விரைவில் சமூகமயப்படுத்தப்படுவார்கள் என நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

## கட்சித் தாவலை தடுக்க விசேட நடவடிக்கை

எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் கட்சி உறுப்பினர்கள் கட்சி தாவுவதை தடுக்கும் வகையில் விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் விசேட உறுதிமொழியொன்று பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாகவே இந்த ஆவணத்தில்கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படும்.

எக் காரணங்களுக்காகவும் கட்சி தாவுவதில்லை எனவும், கட்சியின் தீர்மானங்களுக்கு இணங்குவதாகவும் உறுதியளித்து ஆவணங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கட்சிக் கோட்பாடுகளை மீறி செயற்பட்டதை தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# யாழ்ப்பாணம் வருவதாயின் 2014 ஆம் ஆண்டில் வாருங்கள்

## மன்மோகனுக்கு அரியம் எம்.பி. அழைப்பு

தமிழினத்தை அழித்து அந்த அழிவுகளை சீர்செய்ய முன்வராத அரசாங்கம் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது, அனைத்து இனங்களும் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ்கின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட முனையும் ஒரு செயற்பாடே இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் உட்பட பல நாட்டுப் பிரதமர்கள் இலங்கை வருவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டிற்கு எந்த நாட்டு பிரதமரும் செல்லக்கூடாது என்பதே எமது த.தே.கூட்டமைப்பின் ஆணித்தரமான கருத்தாகும். இதனை எமது கட்சி அன்றிலிருந்து இன்றுவரைக்கும் கூறிககொண்டே வருகின்றது.

வடமாகாண சபை முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கடிதம் மூலம் இந்திய நாட்டுப் பிரதமரை யாழ்ப்பாணத்தின் நிலைமைகளை பார்வையிட வருமாறு அழைத்திருப்பது தொடர்பாகவும் மக்களிடையே பல கேளவிக்கணைகள் தொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய நாட்டின் பிரதமர் யாழ்ப்பாணம் வருவதாக இருந்தால், எதிர்வரும் 2014ஆம் ஆண்டு தைமாதம் இலங்கைக்கு வருகை தந்து இந்த நாட்டிலே எமது சிறுபான்மைச் சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இனம் படும் துன்பதுயரங்களை நேரில் பார்வையிட முடியும்.

அதனை விடுத்து பொதுநலவாய மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் வருகை தருவாராக இருந்தால் அச்செயல் தமிழ்நாட்டு மக்களினதும். எமது தமிழ் மக்களினது முகத்தில் கரி பூசுவது போன்ற ஒன்றாகவே பார்க்கப்படும் என்பதை இங்கு வருபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடி சூட்டுவது போன்று இந்தியப் பிரதமரின் யாழ்ப்பாண வருகை அமைந்துவிடக் கூடாது என அவர் தெரிவித்தார். (அ-2)

# இந்திய கடற்படையினரால் தமிழக மீனவர்களை தடுக்க முடியவில்லை

இந்திய மீனவர்களின் அத்து மீறல்களை அந்நாட்டு கடற்படையினரால் தடுத்து நிறுத்த முடியவில்லை என இலங்கைக் கடற்படைத் தளபதி ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய கடற்படையினராலும், கரையோரப் பாதுகாப்புப் பிரிவினராலும் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களை தடுத்து நிறுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்திய கடற்படையினருடன் நாம் நெருங்கிய தொடர்புகளை பேணுவதுடன் அத்துமீறல்களில ஈடுபடக் கூடாது என பல முறைகள் எச்சரிக்கைகளை விடுக்கின்ற போதிலும் அதனை எவரும் செவிசாய்ப்பதாகவில்லை.

இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் வலைகள் கடல் வளங்களுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும், அவர்களால் பிடிக்கப்படும் அதிகளவான மீன்கள் விரயமாக்கபபடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாம்பனிலிருந்து தூத்துக்குடி வரையிலான கடற் பரப்பை கண்காணிப்பது என்பது சுலமான காரியமல்ல என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தீர்மானத்தை புறக்கணித்து விட்டு மாநாட்டுக்கு செல்லுங்கள்

## சுப்பிரமணியன் சுவாமி கோரிக்கை


விடுதலைப்புலிகளிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டு செயற்படுபவர்களின் பேச்சுக்களைக் புறக்கணித்து விட்டு இந்தியா பொதுநலவாய நாடுகளின் கொழும்பு மாநாட்டில் பங்கேற்கவேண்டும் என்று இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கோரியுள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு போராட்டம் செய்வோரே இல்ங்கை மாநாட்டுக்கு இந்தியா செல்லக்கூடாது என்று கோஷிக்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவின் அரசியல் அமைப்பின்படி வெளிநாட்டுக் கொள்கை என்பது மத்திய அரசாங்கத்தினதும் நாடாளுமன்றத்தினதும் கொள்கைப்படியே செயற்படுத்தப்படுகிறது.

எனவே, இதில் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஏற்புடையதாக இருக்காது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


தமிழக அரசாங்கமும் வெறுமனே சிறிய குற்றச்சாட்டுக்களை முன்னிலைப்படுத்தாது இலங்கையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் சுவாமி ஆலோசனை வழங்கியுள்ளார். (அ-2)



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று அண்மையில் மாதகல் நுணசை வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உஷாந்தனும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கருத்துரைகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)




# இரு ஓவியர்கள்



ஒரு நாட்டில் இரு ஓவியர்கள் இருந்தனர். ஒருவன் பெயர் "ரவி" மற்றவன் பெயர் "மதி" இருவரும் ஓவியக்கலையின் கரையைக் கண்டவர்கள். அவர்கள் யாராவது ஒருவரைப் பார்த்தே அவரது உருவத்தையும் உடனே வரைந்து கொடுக்கும் திறமையையும் பெற்றவர்கள்.

அது மட்டுல்ல ஒருவரது அங்க அடையாளங்களையும், தோற்றத்தை யாராவது வர்ணித்தால் கூடப்போதும். அவரது உருவத்தையும் அவர்கள் உடனேயே வண்ண ஓவியமாக்கிக் கொடுத்துவிடு வார்கள்.

அவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி பல நாட்டு மன்னர்களிடம் பலவிதமான ,பரிசுகளைப் பெற்றும் இருந்தனர். ஒரு முறை அவர்கள் ஒருநாட்டு மன்னனைக் கண்டு தமது கலைத்திறனைக் காட்ட வந்திருந்தனர்.

அப்போது அம்மன்னன் "உங்களது திறமையை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனாலும், அதைநேரில் காண நான் ஒரு பரீட்சையை செய்யப்போகிறேன். நீங்கள் யாரையாவது ஒரு விநாடி பார்த்தால்கூட அவரது உருவத்தை அப்படியே வரைந்துவிடுவீர்கள். இப்போது நான் சொல்கிறபடி செய்யுங்கள் பார்க்கலாம். நீங்கள் உங்க ளது உருவப்படங்களை வரைய வேண்டாம். இதுவரை எவ்வளவோ தடவை நிலக்கண்ணாடியில் உங்களுடைய உருவங்களைப் பார்த்திருப்பீர்கள். எனவே, இது உங்களுக்கு அதிசுலபமாகவே இருக்குமென நம்புகிறேன்" என்றான்.

அதைக்கேட்ட அந்த இரு ஓவியர்களும் சற்று திடுக்கிட்டனர். ஆயினும், அந்த மன்னன் கூறியது போலச் செய்வதாக கூறினார். அப்போதே அந்த அர சனும் அவர்களுக்கென பிரத்தயேகமாக ஒரு அறையை ஒழித்துக் கொடுத்தான். அதில் கண்ணாடிபோல உருவத்தைக் காட்டக்கூடிய எவ்விதமான பொருளையும் வைத்திருக்கவில்லை. அப்படி இருந்த ஓரிரு பொருள்களையும் அங்கிருந்து அகற்றிவிடும்படி அவன் கட்டளையிட்டான். அவர்கள் தமது உருவப்படங்களை வரையும் போது தமது தோற்றங்களை எங்குமே பார்க்கக்கூடாதென்பதே அவன் விரும்பியது.

ஓவியர்கள் இருவரும் அந்த அறைக்குள் வந்ததும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அவர்களுக்கு ஒரு யோசனை சட்டென் தோன்றியது. அதன்படி "ரவி" தன் நண்பன் "மதியின்" சித்திரத்தை வரைந்தான். மதியும், ரவியினுடைய



சித்திரத்தை வரைந்தான். இரண்டையும் இருபெட்டிகளில் வைத்து அந்த அறையில் வைத்துவிட்டு, வேலைக்காரர்களை கூப்பிட்டு அவற்றை எடுத்துக் கொண்டுபோய் அரசனிடம் காட்டும்படி கூறினர்.

அரசன் பெட்டிகளில் இருந்து சித்திரங்களை எடுத்துப் பார்த்தான். அப்படியே மலைத்துப்போய் நின்றுவிட்டான். ஏனெனில், அந்த இரு உருவங்களுக்கும் அந்த ஓவியர்களின் உண்மைத் தோற்றத்திற்கும் கொஞ்சம் கூடவே வித்தியாசம் இருக்கவில்லை. அவர்களுக்கு அவனோ ஏராளமான பரிசைக் கொடுத்து அனுப்பினான். ஆனால், அந்த மன்னனுக்கு ஓவியர்கள் இருவரும் ஒருவர் மற்றவருடைய உருவத்தை வரைந்தார்கள் என்று தெரியவே தெரியாது. அப்படியும் ஒருவேளை நடந்திரக்குமோ் என்றுகூட அந்த மன்னனும் நினைக்கவே இல்லை. ⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙




- 1576- ஸ்பானியப் படைகள் பெல்ஜியத்தின் ஆண்ட் வேர்ப் நகரை கைப்பற்றினர்.
- 1861- வாஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டது.
- 1869-அறிவியல் இதழ் நேச்சர் முதற்தடவையாக வெளியிடப்பட்டது.
- 1914-பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கியுடன் போரை அறிவித்தன.
- 1918-முதலாம் உலகப்போர்: இத்தாலியிடம் ஆஸ் திரியா- ஹங்கேரி அரசு சரணடைந்தது.
- 1918-40 ஆயிரம் கடற்படையினர் கீல் துறைமுகத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஜெர்மனியப் புரட்சி தொடங்கியது.
- 1921- ஜப்பானியப் பிரதமர் ஹரா தக்காஷி டோக்கியோவில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- 1956-ஒக்டோபர் 23 இல் ஆரம்பமான ஹங்கேரியப் புரட்சியை முறியடிக்க சோவியத் படைகள் ஹங்கேரியை முற்றுகையிட்டன. ஆயிரக் கணக்கான ஹங்கேரியர்கள் கொல்லப்பட்டு லட்சக்கணக்கானோர் நாட்டைவிட்டு வெளியேறினர்.
- 1966- இத்தாலியின் புளோரென்ஸ் நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளப் பெருக்கில் அழிந்தது. 113 பேர் கொல்லப்பட்டனர் பல பெறுமதியான ஓவியங்களும் நூல்களும் அழிந்தன.
- 1967-நடிகர் எம்.ஜி.ஆர் கொலை முயற்சி வழக்கில் நடிகர் எம். ஆர். ராதாவுக்கு ஏழு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.
- 1979-ஈரானியத் தீவிரவாதிகள் டெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயத்தை முற்றுகையிட்டு 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.
- 1984-நிக்கராகுவாவில் இடம்பெற்ற தேர்தல்களில் சண்டினீஸ்டா முன்னணி வெற்றி பெற்றது.
- 1995- இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீன் தீவிரவாத வலது சாரி இஸ்ரேலியரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2004-ஐவரி கோஸ்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் 12 பிரெஞ்சுப் படையினர் மற்றும் 3 ஐ.நா. கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப் பட்டனர்.


இறப்புக்கள்

- 1988- ஜேம்ஸ் இரத்தினம், ஈழுத்து எழுத்தாளர் (பி.1905)
- 1995- இட்சாக் ரபீன், இஸ்ரேல் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1922)

# இரகசியம்

ஏழு வயதான சிறுமி கமலா ஒருநாள் தன் தந்தையிடம் வந்து, "அப்பா, அப்பா! நான் பக்கத்து வீட்டுக்கு போன சமயம், அந்த வீட்டு மாமியும், இன்னொரு மாமியும் கிசு ,கிசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் இரகசியம் பேசும்போது குழந்தைகள் அங்கு வரக் கூடாது என்று சொலலி என்னை விரட்டிவிட்டாள். ரகசியம் என்றால் என்ன அர்த்தம்?" என்றாள்?

அதற்கு அவள் தந்தை "சொல்கிறேன் கேள்! அதற்கு முன் நீ பஞ்சாயத்து வாசலில் கூடியிருப்பவர்களிடம் நான் இன்று மாலை மாந்தோப்புக்கு வரச் சொன்னதாகச் சொல்" என்றார். கமலாவும் அப்படியே செய்தாள். அன்று மாலை, கமலா தன் அப்பாவின் கையைப் பிடித்துக்கொண்டு மாந்தோப்புக்குச் சென்றாள். செல்லும் வழியில், கமலாவின் அப்பா ஒரு வீட்டுக் கதவைத் தட்டி, அவனிடம் காதருகில் "உளுந்து விலை அடுத்த மாதம் பயங்கரமாக ஏறப் போகிறது. இதை யாரிடமும் சொல்லாதே!" என்றார். "அப்பா நீ எதற்கு இப்படிச் செய்கிறாய்? என்று கமலா கேட்க," அதற்கு அவர் "உனக்கு இரகசியம்



என்ன என்று புரியவைக்கத்தான் இப்படி செய்கிறேன். நாம் ஒருவரிடம் யாரும் பார்க்காத வேளையில் ஏதாவது ஒரு தகவலை சொல்லிவிட்டு அதை யாரிடமும் சொலலாதே என்று எச்சரிக்கிறோம், அதுதான் இரசிகசியம்! எல்லோருக்கும் தெரியும்படி விடயம் சொல்வது செய்தி அல்லது தகவல் எனப்படும். அதாவது, நீ காலையில் பஞ்சாயத்து வாசலில்கூடி இருப்பவர்களிடம் கூறியது தகவல். நான் இப்போது கூறியது இரகசியம். புரிந்ததா?" என்றார்.

"போப்பா! இதை சொல்வதற்காகவா என்னை அலைக்கழித்தாய்?" என்று கமலா சிணுங்கினாள்.

# சிறந்த நிர்வாகியா நீங்கள்?



ஆன்மீகம் 27

நீங்கள் செய்கிற செயலால் அழுத்தம் ஏற்படுகிறது. உங்களை நீங்களே மோசமாக நிர்வகிப்பதால் தான் அழுத்தம் வருகிறது. தனது இயங்கு முறைகளை நிர்வகிக்க தெரியாத ஒருவனுக்கே அழுத்தம் ஏற்படுகிறது. இன்று கடைநிலை ஊழியருக்கும், முதல்நிலை நிர்வாகிக்கும் கூட, தங்கள் பணிகள் மன அழுத்தம் தரக்கூடியது என்றுதான் கருதுகிறார்கள்.

உண்மையில் அது பணியில் இல்லை. உங்கள் செயற்பாடுகளை நீங்களே கையாள முடியாத போது மன அழுத்தத்திற்கு ஆளாகிறீர்கள்.

வாழ்வை ஒரு விபத்து போல நிகழ்த்தாமல் அதனை எங்கே கொண்டு செல்ல விரும்புகிறீர்களோ அங்கே செலுத்துவீர்களென்றால் அதற்குத்தான் நிர்வாகம் என்று பெயர். நான்கு பேருக்கு சமையல் நடக்கும் ஒரு சமையல் அறையை நிர்வகிப்பதென்றாலும், பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு தொழிற்சாலை என்றாலும் அதற்குரிய சூழலை உங்களுக்கு நன்கு நிர்வகிக்க தெரிந்திருக்க வேண்டும். உங்களைச் சுற்றியுள்ள பொருட்களையும், மனிதர்களையும் கையாள தெரிந்திருக்க வேண்டும்.

பத்துபேரையோ, பத்தாயிரம் பேரையோ நிர்வகிக்கிறீர்களென்றால் பத்து அல்லது பத்தாயிரம் மனங்களை நிர்வகிக்கிறீர்கள் என்று பொருள். உங்கள் மனதையே உங்களால் நிர்வகிக் முடியாத போது பத்தாயிரம் மனங்களை நீங்கள் கையாண்டால் அது பேரழிவாகத்தான் முடியும். இத்தகைய நிர்வாகத்தால் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் நாம் செய்கிற எல்லாமே, மனித குலத்தின் நலம் கருதித்தான்.



ஒரு கானகத்தில் தற்பெருமை பிடித்த சிங்கம் இருந்தது. அது ஒரு முயலைப் பிடித்து "இந்த காட்டுக்கு யார் ராஜா?" என்று கேட்டது. பயந்து நடுங்கிய முயல் "நீங்கள் தான்! நீங்கள் தான்! நிச்சயமாக நீங்கள் தான்!" என்றது. இதுபோல் ஒரு நரி மற்றும் சில விலங்குகளைப் பிடித்து இதே கேள்வியைக் கேட்டது.

எல்லா விலங்குகளும் பயத்தில் "நீங்கள் தான் ராஜா" என்று கூறின. இதனால் முழுகானகமே தன் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டது என்ற சந்தோஷத்தில் உற்சாகமாய் நடை பயின்றது சிங்கம். சற்று தூரத்தில் ஒரு யானை வந்தது. அதனிடமும் "இந்த காட்டுக்கு யார் ராஜா? என்று சிங்கம் கேட்டது. யானை தன் துதிக்கையால் சிங்கத்தைப் பற்றியிழுத்து ஒரு சுழற்று சுழற்றி வீசி எறிந்தது. தட்டுத்தடுமாறி எழுந்த சிங்கம் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லி இருக்கலாமே என்றது. அதற்கு யானை, நான் தெளிவாகச் சொல்ல வேண்டுமில்லையா! அதற்காகத்தான்! என்றது. எனவே, பலத்தைக் காட்டுவதற்குத்தான் நிர்வாகம் என்று பல்ரும் எண்ணுகிறார்கள். அதை எவரும் செய்யலாம். ஒரு சூழ்நிலையை நீங்கள் நிர்வகிக்கிற போது அங்கே செயல் கள் நடந்தால் மட்டும் போதாது. அங்கிருப்பவர்கள் தங்கள் நிலை உயர்ந்திருப்பதாக கருத வேண்டும்.

ஓரிடத்தை நிர்வகிக்கிறீர்களென்றால் நீங்கள் அற்புதமான மனிதராகத் திகழ வேண்டும். அது நிகழவில்லையென்றால் நீங்கள் ஒரு நல்ல நிர்வாகி இல்லை. (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இனவாத பாசிஸ்டுகளுக்கு எதிராக, கிரீசில் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம்

கிரீசில் இடதுசாரி மக்கள் பாடகரும், பாசிச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஊக்கத்துடன் ஈடுபட்டவருமான பாவ்லோ, கடந்த செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி தங்க விடியல் என்ற நியோ நாஜி கட்சியினரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்களும் பொதுமக்களும் இனவாத பாசிஸ்டுக்களுக்கு எதிரான மிகப்பெரும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 6 லட்சம் பேர் கலந்துகொண்ட இந்த வேலை நிறுத்த போராட்டம் கிரீசின் 35-க்கும் மேற்பட்ட நகரங்களில் பற்றிப் படர்ந்தது. இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. இதில் அனைத்து பொதுத் துறை ஊழியர்களும், பெருமளவிலான பொதுமக்களும் கலந்து கொண்டு இனவாத பாசிஸ்டுகளுக்கு எதிரான தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். தலை நகர் ஏதென்சில் நடந்த ஊர்வலத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் கலந்துகொண்டு தங்கள் எதிரப்பை பதிவு செய்துள்ளனர்.

## பாவ்லோஸ்

கொல்லப்பட்ட பாவ்லோஸ், ஒரு பைப் ஃபிட்டர் தொழிலாளியாக இருந்தவர். கிரீசின் பொருளாதார நெருக்கடியில் வேலை இழந்த பாவ்லோஸ் முழு நேர பாடகராக செயற்பட தொடங்கியிருந்தார். உலோகத் தொழிற்சங்க உறுப்பினரான இவர் அரசுக்கு எதிரான அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளார்.


2008 இல் அமெரிக்காவில் ஆரம்பித்து ஐரோப்பாவெங்கும் பரவிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து கிரீஸ் திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டது. முதலாளித்துவத்தின் இலாப வெறியினால் ஏற்பட்ட இந்த பொருளாதார நெருக்கடியின் சுமைகளை, உழைக்கும் மக்களின் தலையில் கட்டி, முதலாளிகளை காப்பாற்றும் மீட்பனாக கிரீஸ் அரசு, ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவை களம் இறங்கின.

இந்த நிறுவனங்கள் மீட்பு நிதியாக கிரீஸ் அரசுக்கு 24 ஆயிரம் கோடி யூரோவை கடனளிப்பதற்காக விதித்த நிபந்தனைகளின் அடிப்படையில் வேலைகள், ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை குறைத்ததுடன், வரி விகிதத்தை உயர்த்தியுள்ளது கிரீஸ் அரசு. மேலும் சுகாதார பட்ஜெட் சுமார் 40 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. காப்பீடு இல்லாமல் மக்கள் மருத்துவம் பார்க்க இயலாத சூழல் நிலவுகின்றது. கல்விக்கான மானியம் வெட்டப்பட்டுள்ளது.

## கிரீஸ் நாஜி எதிர்ப்பு

மொத்த மக்கள் தொகையில் 28 லட்சம் பேர் வாழ்வதற்கே பணமில்லாத நிலையிலும், 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தமது குடும்பத்தில் எவருக்குமே வேலையில்லாததால் முற்றிலும் பணமில்லாத பராரிகளாகவும் தள்ளப்பட்டுள்ளனர். 6 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தங்களுக்கு அரசு அளிக்க வேண்டிய ஓய்வூதியம் போன்ற நிலுவையிலுள்ள தொகையை தவணை முறையில் அளிப்பதைக் கொண்டு தங்களால் வாழ இயலவில்லையென, அவற்றை உடனடியாக வழங்கக் கோரி நீதிமன்றத்திற்கு சென்றுள்ளனர்.

இதன்விளைவாக நாளுக்கு நாள் மக்கள் போராட்டங்களும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வீரியமாகிக் கொண்டு வருகின்றன. நாங்கள் 99 சதவீதம், முதலாளிகள் 1 சதவீதம் என்று கூறி பங்குச் சந்தை வீதிகளை கைப்பற்றும்போராட்டம் அமெரிக்கா, ஐரோப்பா முழுமைக்கும் நடந்தது.



நியோ நாஜிக் கட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம்

இந்த பின்னணியில் மக்கள்போராட்டத்தின்வளர்ச்சிப் போக்கு முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான போராட்டமாக மாறும் வாய்ப்பு இருப்பதை முதலாளிகள் அச்சத்துடன் பார்க்கின்றனர்.


நியோ நாஜிகளால் கொல்லப்பட்டுவிட்ட பாடகர்-பாவ்லோ,

இந்தச் சூழலில் ஒட்டுமொத்த பிரச்சினைக்கும் காரணம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்தான் என்றும், அவர்களால் தான் கிரீஸ் மக்களின் வாய்ப்புக்கள் தட்டிப்பறிக்கப்படுகின்றன, அவர்களை ஒழித்தால் பிரச்சினை தீரந்து விடும் என்றும் பிரச்சாரம் செய்யும் இனவாத அமைப்புக்களின் செல்வாக்கை ஆளும் வர்க்கங்கள் வளர்த்துவிட ஆரம்பித்தன.

முதலாளிகள் அதிக லாபம் சம்பாதிப்பதற்கு குறைந்த கூலியில் உழைக்க ஆள் வேண்டும் என்ற நோக்கத்தில் வெளிநாடுகளிலிருந்து அவர்கள், இறக்குமதி செய்த புலம்பெயர் தொழிலாளர்கள் மீது அதே இலாப வேட்டையின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கான பழியும் சுமத்தப்பட்டது. இவ்வாறு மடை மாற்றுவது முதலாளித்துவத்திற்கு புதியது அல்ல.

1929- இல் அமெரிக்க வால்வீதியில் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடி நிதிச் சந்தை வீழ்ச்சி பொருளாதார பெரு மந்தமாக உருவெடுத்து ஐரோப்பா நெருக்கடியில் சிக்கிய போது, மக்கள் முதலாளித்துவத்தின் மீது நம்பிக்கை இழந்து, சோவியத் யூனியனின் முன் மாதிரியால் ஈர்க்கப்பட்டு, கம்யூனிச ஆதரவு வளர்ந்த நிலையில் ஜேர்மனியில் ஹிட்லரின் தலைமையில் நாஜிக் கட்சி வளர ஆரம்பித்தது.

ஜெர்மன் மக்களின் பிரச்சினைக்கு முழுக் காரணமும் யூத மக்கள்தான் என்ற இன வெறி பிரச்சாரம், அவர்களை ஒழித்தால் பொருளாதர பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற மோசடி பிரச்சாரம், தேசிய சோசலிசம் என்ற சில சொல்லாடல்கள் இவற்றை பயன்படுத்தி, மக்களைத் திரட்டி ஆட்சியைப் பிடித்தது நாஜி கட்சி.

இதன் இந்திய பதிப்பாக 1980 களுக்குப் பிறகு மறுகாலனியாக்க கொள்கைகள் இந்தியாவில் தீவிரப்படுத்தப்பட்ட போது, பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ. அமைப்புக்கள் கையில் எடுத்த, அயோத்தியில் இராமர் கோயில் பிரச்சினை மக்களை மதரீதியாக பிளந்து, பொருளாதார பிரச்சினைகளுக்கு எதிரான போராட்டங்களை திசை திருப்பியது.


அதுபோல் கிரீசில், 2009இல் நெருக்கடிக்கு பிறகு அதே செயல் தந்திரத்தை கடைப்பிடித்து கோல்டன் டான் என்ற இனவாத நாஜிக் கட்சி வளர்ந்து வருகிறது. புலம்பெயர்ந்த வெளிநாட்டு தொழிலாளர்களால் கிரேக்க கலாசாரம் தாக்குதலுக்கு உள்ளாகிறது என பிரச்சாரம் செய்கிறது இந்த நியோ-நாஜி கட்சி. இந்தக் கட்சி தனக்கு என துணை இராணுவப் படையை பராமரித்து வருகிறது. இந்தப் படைக்கு கிரேக்க இராணுவம் பயிற்சி அளித்து வருகிறது. (தொடரும்)

-இணையம்-

# பண்ணையில் குடைக்கலாசாரம்



## தட்டிக்கேட்க ஆட்கள் இல்லாததால் தாண்டவமாடுகின்றனரா இளசுகள்



கலாசாரம், பண்பாடு என்பவற்றுக்கு பெயர் போன இடம் தமிழர் பிரதேசம். எங்களுடைய கலாசாரத்தை கற்றுக் கொள்ள வேண்டும் என்பது பிற பிரதேச மக்களின் எதிர்பார்ப்பு. அதற்காக அவர்கள் வடக்கிற்கு விஜயம் செய்து எமது கலாசாரத்தை அறிந்து சென்றிருக்கின்றனர்.

தமிழ்நாட்டில் தமிழ்க் கலாசாரம் என்று பேசும் இடங்களிலெல்லாம் இலங்கைத் தமிழர்களின் செயற்பாடுகளே உதாரணத்துக்காக எடுத்துக் கொள்வார்கள். ஆனால், இன்று எமது பண்பாடு, கலாசாரம் எல்லாமே எதிர்மாறாக பேசுவதற்கு உதாரணமாகிவிட்டன.



வடக்கு மாகாணத்தில் இன்று எமது பண்பாடுகளை, கலாசாரங்களை சிதைக்கும் நடவடிக்கைகள் விரைவாக அரங்கேற்றப்படுகின்றன.

இதற்கு அபிவிருத்தி என்ற வகையில் களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. இந்தக் களம் யாழ்ப்பாணப் பண்ணைப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி என்ற வகையில் யாழ்ப்பாணம் கோட்டை புனரமைக்கப்பட்டு வருகின்றது. அதே போன்று பொழுது போக்குக்காக பண்ணைப் பகுதியில் இருக்கைகள் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

பாவனைக்கு விடப்பட்ட சிறிது காலங்களில் மிகவும் கட்டுக்கோப்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இன்று அங்கு கலாசாரம் தடம்புரண்டு ஆடுகின்ற செயற்பாடுகள் காணப்படுகின்றன.

பகல்- இரவு என்ற நேர வித்தியாசமின்றி இளம் வட்டங்கள் அடிக்கும் கூத்துக்களுக்கு அளவு இல்லாமற் போயுள்ளது.

ஆரம்பகாலத்தில் கணவன்-மனைவி, பிள்ளைகள் என பொழுது போக்குவதற்காக அங்கு சென்று வந்தனர்.

பிள்ளைகளுடன் பெற்றோர் தமது அன்பைப் பகிர்வதற்காக மாலை வேளைகளில் அங்கு சென்று கூடிக்குலாவுகின்றனர். ஆனால், இன்று பண்ணைப் பகுதியில் கலாசாரத்தை சீரழிக்கும் நடவடிக்கைகள் அரங்கேறுகின்றன.

இளவட்டத்தினர் ஜோடிகளாக சென்று பலர் முன்னிலையில் தகாத செயல்களில் ஈடுபடும் செயற்பாடுகள் இன்று பண்ணைப் பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன. குறிப்பாக விடுமுறை தினங்களில் இளம் ஜோடிகள் குடைகளைப் பிடித்தவாறு தமது காதல் லீலைகளை அரங்கேற்றுகின்ற நிகழ்வுகள் இடம் பெறுவதை அனைவரும் அவதானிக்கத் தவறவில்லை.

தனித்தனி மோட்டார் சைக்கிள்களில் வந்து பின்னர் பண்ணையில் ஒன்றாகி தலைக்கவசங்களைக் கழற்றி வைப்பதற்குக்கூட நேரமில்லாது எமது கலாசாரத்தை சீரழிக்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

அதேபோன்று எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ள கோட்டையின் உட்பகுதியில் அரங்கேறும் சம்பவங்களை எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. மதியம் அல்லது மாலை வேளைகளில் சனநடமாட்டம் குறைந்திருக்கும் நேரங்களில் கோட்டையின் உட்பகுதியில் வயது வித்தியாசமின்றி அங்கு கும்மாளமடிப்போரின் தொல்லைகள் சொல்லி மாளாது.

தாங்கள் காட்சிப்பொருட்களாக இருக்கிறோம் என்ற நினைப்பே இல்லாமல் அவர்கள் புரியும் அட்டகாசங்களை யாரிடம் போய் முறையிட முடியும்.



நண்பர்கள் கூட்டத்துடன் உள்ளே சென்று பின்னர் தனித்தனியே பிரிந்து செல்லும் சம்பவங்களும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அங்கு இருப்பவர்களில் அதிகமானோரின் கைகளில் புத்தகங்களும் புத்தகப் பைகளும்தான் காணப்படுகின்றன. ஆனால், அவர்களின் செயற்பாடுகள் கல்விக்கு அப்பாற்பட்டதாகவே காணப்படுகின்றன. பெண் பிள்ளைகள் இருள் சூழ்ந்த பின்னரும் கோட்டைப் பகுதியில் நடமாடுகின்றனர். இதனைக் கண்டு கொள்ள பெற்றோர் ஏன் தவறுகின்றனர் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

அன்பான பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை கவனிக்க தவறிவிடாதீர்கள். எமது பிரதேசத்தில் தற்கொலை, பாலியல் பலாத்காரம், கொலை என பட்டியல்கள் நீண்டே செல்கின்றன. இளம் பருவத்தினர் தமது உணர்வுகளைத் தாண்டி மேற்கொள்ளும் சில செயற்பாடுகள் காரணமாகவே இந்தச் சம்பவங்கள் அரங்கேறுகின்றன. இவை தொடருமானால் யுத்தத்தால் இழந்த உயிர்களைவிட கலாசாரத்தால் சீரழிக்கப்பட்டு உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை அதிகமாகும் காலம் வெகு தொலைவில் இல்லை.

தமது பிள்ளைகளின் செயற்பாடுகளை கண்காணித்து அதனை கட்டுப்படுத்தும் முழுப் பொறுப்பும் பெற்றோர்களையே சாரும். அவர்கள் இதனைக் கட்டுப்படுத்தத் தவறுவார்களேயானால் தமது பிள்ளைகளால் சமூகத்தைச் சீரழித்தவர்கள் என்ற அவப்பெயரை அவர்களே தாங்கிக்கொள்ளவேண்டும்.

கலாசார விழுமியங்களை இளவட்டத்தினரிடையே கொண்டு செல்வதற்கு சமூக அமைப்புக்களும் முன்வரவேண்டும். அப்போதுதான் தமிழ்ச்சமூகம் பண்பாடுள்ள ஒரு சமூகமாக என்றும் காணப்படும். இதனை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

தீபன்

# நேசக்கரத்தை நீட்டியுள்ளோம்; முடிவெடுக்க வேண்டியது அரசுதான்

## சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**வடமாகாணசபைத் தேர்தலின் பின்னர் நாங்கள் நல்ல சமிக்ஞையை அரசாங்கத்துக்கு காட்டியுள்ளோம். நேசக்கரத்தை நீட்டியுள்ளோம். முடிவெடுக்க வேண்டியது இனி அரசாங்கமே. இருந்த போதிலும் அண்மைக்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தின் அட்டூழியங்கள் அதிகரித்து வருகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இந்த நிலைமை உண்மையான, விசுவாசமான நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவப் போவதில்லை.

மக்களுடைய ஜனநாயக தீர்வை மதித்து நடக்க வேண்டியது எந்தவொரு அரசாங்கத்தினதும் கடமை என்று நாம் கருதுகின்றோம்.

இன்று ஆட்சியிலுள்ள அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம். மக்களால் கொடுக்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலேயே ஆட்சி நடைபெறுகின்றது.

அரசாங்கத்துக்கு தற்போதுள்ள அந்தஸ்து மக்களின் ஆதரவின் அடிப்படையிலேதான் உருவாக்கப்பட்டது.



ஜனாதிபதியாக இருந்தாலென்ன, அமைச்சர்களாக இருந்தாலென்ன, எந்தப் பதவியில் இருந்தாலென்ன இதுதான் உண்மை.

மக்களின் ஆணையின் அடிப்படையில் அதிகாரத்தில் உள்ளவர்கள், வடக்கு மாகாணத்துக்கு மக்கள் பெரும்பான்மையாக அளித்த ஆணையையும் மதிக்க வேண்டியது அவர்களது கடமையாகும்.

இந்த விடயத்தில் அரசாங்கம் தனது விருப்பு, வெறுப்பின் அடிப்படையில் செயற்பட முடியாது.

இறைமை மக்களுக்குரியது. அந்த இறைமையின் நிமிர்த்தம் மக்கள் ஜனநாயக தீர்வை அளித்திருக்கிறார்கள். அந்த தீர்வை அரசாங்கம் மதிக்க வேண்டும்.

மதிக்காவிடின் சர்வாதிகாரப் போக்கில் ஆட்சியை நடத்துவதற்கே அவர்கள் விரும் புகின்றார்களென முடிவெடுக்க நேரிடும். அது நல்ல விடயமல்ல என்றார். (அ-2)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரம் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தினால் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கிடையிலான கரம் போட்டி இன்று திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவை குழுப்போட்டிகளாக நடைபெறும். ஒவ்வொரு அணியிலும் குறைந்தது 5 பேர் பங்கு பற்றுதல் கட்டாயமாகும். மூன்று தனிப் போட்டியும் 2 இரட்டையர் போட்டிகளையும் உள்ளடக்கியதாக ஒரு குழுவுக்கு 5 போட்டிகள் நடத்தப்படும் என யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழக செயலாளர் யே.நிரோஷானந் அறிவித்துள்ளார். (அ-7)

# பாலம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

வியாபாரி மூலை மாலுசந்தி வீதியில் சேதமடைந்த நிலையில் பலகாலமாக திருத்தப்படாதிருந்த பாலத்திற்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த பல மாதமாக குறித்த பாலம் முற்றாக சேதமடைந்திருந்தமையால் இப்பாலத்தினூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை போதிய நிதியின்மையாலே இப்பாலத்திற்கான புனரமைப்புப் பணிகள் ஸ்தம்பிதமடைந்திருந்ததாகவும் தற்போது இப்பாலம் புனரமைக்கப்படவுள்ளதாகவும் வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (அ-5-10)

# பொதுநலவாய ஆரம்ப நிகழ்வுக்கு ஐம்பது மில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது 15 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வுக்கு மாத்திரம் இலங்கை அரசாங்கம் 50 மில்லியன் ரூபாய்களை செலவிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் பத்தரமுல்லயில் நான்கு நாட்களாக களியாட்ட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதற்கும் தனியாக 50 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் 2013 ஆம் ஆண்டின் பொதுநலவாய அமர்வு நிகழ்வுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பித்து 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதில் சுமார் 2 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். (அ-2)

# கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த சுதந்திர ஊடக மையம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் செயற்பட வேண்டும் என்று இலங்கையின் சுதந்திர ஊடக மையம கோரிக்கை விடுத்துள்ளது.

சுதந்திர ஊடக மையம் இது தொடர்பில் திறந்தநிலை கோரிக்கை ஒன்றை பொதுநலவாய நாடுகளின் தலைவர்களிடம் விடுத்துள்ளது.


அதில் உள்ளூரில் மனித உரிமைகளைக் காத்தல் மற்றும் பேச்சுச் சுதந்திரம் என்ற விடயங்களை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பேச்சுச் சுதந்திரத்துக்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையையும் சுதந்திர ஊடக மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

போரின் போது இலங்கையில் 34 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். 100இற்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டனர்.

இதன்காரணமாக 100 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கையின் ஜனாதிபதியே பொதுநலவாய நாடுகளின் தலைவராக இருக்கப்போகிறார். எனவே, இதன்போது பொதுநலவாய கொள்கைகள் பின்பற்றப்படும் என்று தாம் நம்பிக்கை கொள்வதாக சுதந்திர ஊடக மையம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)






யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் விஞ்ஞானதின விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விந்தை இறுவெட்டு வெளியிடப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பொ.சற்குணநாதன், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட வே.இரவீந்திரன், க.வேலாயுதநாதன், இ.அரசகுலசூரியர் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெளியிடப்பட்ட இறுவெட்டை மாணவி ஒருவர் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

## இசைப்பிரியா

# தமிழ்ப் பெண்கள் மீதான கொடூரங்களின் அடையாளம்


சிங்கள தேசத்தின் கொடூர முகத்தை மீண்டும் அம்பலப்படுத்தும் இன்னொரு காணொலியை சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பதற்கு, இதற்கு மேலும் சாட்சிகள் தேவையில்லை என்ற வெளிப்படுத்தல்களுக்குப் பின்னர் இந்த உலகம் ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்போகும் நீதி என்ன? என்பது தான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனத்தின் கேள்வியாக இருக்க முடியும்.


இசைப்பிரியா என்ற தமிழ்ப் பெண், சிங்கள இராணுவப் படையினரால் சிதைக்கப்பட்டு, பின்னர் உயிருடன் இழுத்து வந்து கொடுமைகளுக்காளாக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட காட்சி, மிகத் துல்லியமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னர் வெளிவந்த காணொலிக் காட்சிகள் போன்று இந்தக் காட்சிகள் கைத் தொலைபேசியினால் ஏதேதோ காரணங்களுக்காகப் பிடிக்கப்பட்டதல்ல.

கைதேர்ந்த களமுனைப் படப்பிடிப்பாளரால் அசையாமல் பொருத்தி வைக்கப்பட்ட தொழில் வீடியோ கமெராவினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இது, இறுதிப் போர் நிகழ்வுகளைப் படம் பிடிக்க இலங்கை அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஊடகப் படப்பிடிப்பாளர்களால் முழுமையாகக் காட்சிப் படுத்தப்பட்ட காணொலி ஒன்றின் சிறு காட்சியாக இருக்கும் என நம்பப்படுவதால், இன்னமும் கோரமான பதிவுகள் நிச்சயம் சனல்-4 இடம் இருக்கலாம் என்பது உறுதிப் படுத்தப் படுகின்றது.

இந்தக் காட்சிகள் பதிவு செய்யப்பட்ட இடம் யுத்தம் நடைபெறாத வெட்டை வெளிப் பிரதேசமாக இருப்பதனால், இசைப் பிரியா சிங்களப் படையினரால் மக்கள் நடமாட்டம் இல்லாத வெட்டைவெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மிகக் கொடூரமான பாலியல் சித்திர வதைகளின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இத்தகைய கொடூரங்கள் இசைப் பிரியாவுக்கு மட்டும் நிகழ்ந்தது என்பதல்ல.

இந்தக் காணொலி மூலம் இசைப் பிரியா, தமிழ்ப் பெண்கள் மீதான சிங்களக் கொடூரங்களின் அடையாளமாக உலகின் முன் நீதி கேட்டு நிற்கின்றார்.







சனல்-4 வெளியிட்டுள்ள இந்தப் புதிய காணொலிக் காட்சியையும் சிங்கள இராணுவம் நிராகரித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை "நாங்கள் நிராகரிக்கின்றோம். அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் அவை. இசைப் பிரியா என்பவர் விடுதலைப்புலிகளின் ஆயுதப் பயிற்சி பெற்ற லெப்டினன் கர்ணல் தரத்திலுள்ள போராளி. புலிகளின் தொலைக்காட்சியிலும் தீவிரமாக இயங்கியவர் என்று எங்களுக்குத் தெரியும். ஒருபோதும் அவரோ வேறுயாருமோ உயிரோடு பிடிபடவில்லை. வீடியோவில் அந்தப் பெண்ணைத் தான் காட்டுகிறார்களா? அல்லது யாரையாவது நடிக்க வைத்திருக்கிறார்களா? என்று எங்களுக்குத் தெரியவில்லை. இது நடிப்பாகக்கூட இருக்கலாம் இந்த வீடியோவை தொழில்நுட்ப ரீதியில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த வீடியோ ஒரு நாடகம் என்றுதான் நாங்கள் கருதுகிறோம்" என்று சிங்கள இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, இதுவரை வெளிவந்த ஈழத் தமிழினத்தின் மீதான போர்க் குற்ற ஆதாரங்கள் அனைத்தையும் சிங்களப் படைகளும், சிங்கள ஆட்சியாளர்களும் இதுபோன்றே நிராகரித்தும் மறுத்தும் வந்திருக்கிறார்கள்.

சனல்-4 வெளியிட்டுள்ள இந்தப் புதிய போர்க்குற்ற ஆதாரம் இந்திய அரசியலில் பெரும் அதிர்வினைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மீதான தமிழக மக்களது அதிருப்தி உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. இலங்கையில் இடம் பெற்ற போர்க் குற்றங்களுக்கும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் போலவே, காங்கிரஸ் கட்சிக்கும் சமபங்கு உள்ளது என்று தமிழக ஊடகங்கள் அறிக்கையிட்டு வருகின்றன.

கொழும்பில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளக் கூடாது என்ற தமிழகத்தின் உணர்வலைக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாத நிலையில் இருந்த தமிழக காங்கிரஸ் கட்சி தற்போதைய காணொலிக் காட்சியினால் பலமான சிதைவினை எதிர்கொண்டுள்ளது.

கொழும்பு மாநாட்டிற்குப் பிரதமர் மன்மோகன்சிங் செல்வாரேயானால், தனது மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வேன் என்று ஜி.தே.வாசன் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இனி எதிர்காலமே இல்லை என்ற நிலை உருவாகிவருவதனால், ஜி.கே.வாசன் தலைமையில் மீண்டும் தமிழக காங்கிரஸ் கட்சி உருவாக்கப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழகத்தில் காங்கிரஸ் வாக்கு வங்கியைத் தக்கவைப்பதற்கான காங்கிரஸ் கட்சியின் தந்திரோபாயமாகவே இந்த நகர்வும் நோக்கப் படுகின்றது.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ள வேண்டும் என்ற காங்கிரஸ் வாதத்திற்கு வடமாகாண முதல்வர் விக்கினேஸ் வரனின் வார்த்தைகளே கேடயமாகப் பயன்படுத்தப் படுகின்றது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்ற முதல்வர் விக்னேஸ் வரனின் முந்தைய கருத்தும், மன் மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும் என்ற அவரது பிந்தைய அழைப்பும் தமிழகத்தின் உணர் வலைக்கு எதிரான போராயுதமாக காங்கிரஸ் கட்சியினரால் பயன் படுத்தப்படுகின்றது.

விக்னேஸ்வரனின் கருத்தை தமிழீழ மக்களது கருத்தாகப் பிரச்சாரப்படுத்துவதன் மூலம், இந்திய ஆட்சியாளர்கள் தாம் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதை நியாயப்படுத்த முனைகிறார்கள்.

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் வயதும், அறிவும் அவர் பயன்படுத்தும் வார்த்தைகளால் புனிதப்பட வேண்டும். மாறாக எதிரிகளுக்கான போர்க்கவசமாக மாறும் நிலை இனிமேலும் உருவாகாமல் பார்த்துக்கொள்வதே, காட்சிகளுக்குள்ளும் வராமல் புதைந்து போன பல்லாயிரம் இசைப்பிரியாக்களுக்கான அவரது அஞ்சலியாக அமைய முடியும்.

ஊடகவியலாளரும் இசை நடன கலைஞருமான இசைப்பிரியாவை சிங்கள இராணுவம் கொலை செய்திருந்த காட்சி உள்ளடங்கிய காணொலியை சனல்-4 முன்னதாக 2010 இல் வெளியிட்டிருந்தது.

அச்சமயம் இலங்கை அரசுமீதான சுயாதீன போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கை வலுப்பெறும் வகையில் தாம் வெளியிட்டுள்ள காணொலிக் காட்சி அமைந்துள்ளதாக, முன்னணி போர்க்குற்ற சட்ட வல்லுனரின் ஆய்வுதவியுடன் பிரித்தானியாவின் சனல்-4 தொலைக் காட்சி தெரிவித்திருந்து.

இலங்கையில் இடம் பெற்றிருந்த இறுதிப்போரின் போது கொல்லப் பட்ட பல்லாயிரக்கணக்கானோரில் இசைப்பிரியா என அழைக்கப்படும் (கொல்லப்பட்டபோது) 27 வயதுடைய சோபாவும் உள்ளடங்குவதாகவும், அதனை அவரது தோழியும் தற்போது லண்டனில் வசித்துவருபவருமான ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளதையும் அந்த தோழியின் முகம் மறைக்கப் பட்ட செவ்வியுடன் அன்று- 2010 இல் சனல் -4 வெளிக் கொண்டுவந்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கதிரவன்-சுவிஸ்

# சுயாட்சி மூலமான தீர்வுக்கு இந்தியா உதவ வேண்டும்

## இரா.சம்பந்தன் இந்திய தொலைக்காட்சிக்கு செவ்வி

வடமாகாண சபையை நாம் கைப்பற்றி விட்டோம் என்பதனால் தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன என்று இந்தியா அர்த்தம் கொள்ளக்கூடாது.

நாட்டுக்கு எவ்வித பிளவும் ஏற்படாமல் ஒருமித்த நாட்டுக்குள் அரசியல் ரீதியான அபிலாஷைகளை நாம் அடைந்து கொள்ள போதிய சுயாட்சி மூலமான அதிகாரங்களை பெற்றுக் கொள்ளவும் பூரணமான அதிகாரம் கொண்ட ஆட்சிப் பகிர்வு முறையை எமக்கு பெற்றுத் தரவும் இந்தியா கால தாமதமின்றி உதவ வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு இந்த மாதம் இலங்கையில் நடைபெறவிருக்கின்றது. இந்த மகாநாடு இலங்கையில் நடைபெறக் கூடாதென்று பலர் கருத்துக் கூறியிருக்கின்றார்கள்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உட்பட எல்லோரும் இந்தக் கருத்தைக் கூறி வந்திருக்கின்றார்கள். சில நாடுகள் பகிரங்கமாக இந்த மகாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாகக் கூறிக் கொண்டிருக்கின்றன.

விசேடமாக கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தனது கருத்தை வெளிப்படையாக கூறி வந்திருக்கின்றார்.

இக் கருத்தை தெரிவிப்பதற்கு அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. பொதுநலவாயத்தில் ஒருநாடு உறுப்பு நாடாக இருந்தால் அவர்கள் சில கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

தங்களுடைய நாட்டில் நடைபெறுகின்ற ஆட்சி முறையில் சில தத்துவங்களை மதித்து நடப்பதுடன் அந்த நாட்டில் நல்லாட்சி நடைபெற வேண்டும். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

ஜனநாயகம் உண்மையாக நிலவவேண்டும். நீதிமன்றங்களின் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும். சட்டம், ஒழுங்கு முறையாக பாதுகாக்கப்பட வேண்டும். சட்டம் நீதி, நியாயத்தின் அடிப்படையில் ஆட்சி இடம்பெற வேண்டும்.

இவ்விதமான கோட்பாடுகளின் அடிப்படையில் ஆட்சி நடைபெறாமல் இருக்குமாக இருந்தால் அந்த நாடு இந்த பொதுநலவாய நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையான தத்துவங்களை மீறி நடப்பதாக கருத இடமுண்டு.

இவ்விதமாக மீறி நடந்ததன் காரணமாக இதற்கு முன்பதாக பல நாடுகள் பொது நலவாயத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றன. பல நாடுகள் தமது உறுப்புரிமையைப் பொறுத்தவரை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. சிலநாடுகளில் இது நடைபெறாமலும் இருந்திருக்கலாம்.

ஆனபடியால் இலங்கையைப் பொறுத்தவரை நாட்டுக்குள்ளேயே மாத்திரமல்ல, சர்வதேச ரீதியாகவும் பாரிய குற்றங்கள் இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டு பொதுநலவாய கோட்பாடுகள் மதிக்கப்படவில்லை, மீறப்பட்டிருக்கின்றன என்ற அடிப்படையில் ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேரவையில் கூட 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இலங்கையில் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டுமென்ற கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் இந்த முடிவை பல நாடுகள் எடுத்துள்ளன என்பதை இலகுவாக புரிந்து கொளள முடியும்.

முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவர் சமீபத்தில் விட்ட அறிக்கையில் ஏன் இந்த மகாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டுமென்ற கருத்தை அவர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார். தனது விளக்கத்தை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

அந்தவகையில் தான் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய தலைவர்களும் தமது கருத்துக்களை கூறி வருகின்றார்கள். குறிப்பிடக்கூடிய அளவுக்கு இலங்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

யுத்தம் நடைபெற்ற போது இராணுவ தேவையின் அடிப்படையில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட மக்களுக்குச் சொந்தமான காணிகள் அந்த மக்களுக்கு பெரிய அளவில் கொடுக்கப்படவில்லை. விசேடமாக யாழ்ப்பாணத்தில் வலிகாமம் என்ற இடத்திலும் திருகோணமலையில் சம்பூரிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அந்த மக்களுக்கு கொடுக்கப்படவில்லை.

அக்காணிகள் ஒரு காலத்தில் அதி உயர்பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் அக்காணிகள் கொண்டு வரப்பட்டன.

ஆனால்,தற்போது யுத்தம் முடிவடைந்து விட்டமையால் மக்கள் தமது சொந்தக் காணிகளுக்கு திரும்பிச் செல்ல வேண்டும். தங்கள் வாழ்வாதாரத்தை தொடங்க வேண்டும். இதற்கு எவ்விதமான தடையும் இருக்க வேண்டிய தேவையில்லை. அப்படியிருந்தும் அக் காணிகள் மக்களுக்கு மீளளிக்கப்படவில்லை.

அது மாத்திரமல்ல, யுத்தம் முடிந்த பின்னர் மேலதிகமான காணிகளை அரசாங்கம் கைப்பற்றியிருக்கின்றது. தமது தேவைக்காக சில இடங்களில் இராணுவத்துக்கு வீடு கட்டுகின்றார்கள். இராணுவத்தினர் மக்களின் காணிகளில் விவசாயம் செய்கின்றார்கள். தோட்டம் செய்கின்றார்கள்.

இவ்விதமாக பல தொழில்களில் ஈடுபடுகின்றார்கள். வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்கள்.

இவ்விதமான இராணுவத்தின் நடவடிக்கைகள் காரணமாக மக்களின் வாழ்க்கையில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன. இவற்றை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கத்துக்கு போதிய தகவல்களைக் கொடுத்து பாராளுமன்றத்தில்கூட இது சம்பந்தமாக கூட்டமைப்பினராகிய நாங்கள் எடுத்துக் கூறியுள்ளோம்.

அவ்வாறு கூறிய போதும்தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படவில்லை. உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நிலைமை முன்னேறவில்லை.

மக்கள் இன்றுவரை இரண்டாந்தர பிரஜைகள்ாக கணிக்கப்பட்டு பல நூற்றாண்டுகளாக பரம்பரையாக சுயமரியாதையுடன் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் வாழமுடியாத கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக சுதந்திரமான விசாரணை நடைபெற்று உண்மை அறியப்படும் என்ற வாக்குறுதியை இந்தியாவுக்கு மாத்திரமல்ல சர்வதேச சமூகத்துக்கும் ஐ. நா. சபையினுடைய செயலாளர் நாயகத்துக்கும் கொடுக்கப்பட்டிருந்த போதிலும்கூட இவ்விதமான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.



பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமற் போயிருக்கின்றார்கள். அவர்கள் விடயமாக உண்மையை அறிவதற்கு கூட இன்னும் முறையான விசாரணை நடைபெறவில்லை.

*அவர்கள் குடும்பங்கள், பெற்றோர்கள், மனைவிமார், பிள்ளைகள், இனத்தவர்கள், உறவினர்கள் அலைந்து திரிந்து தேடியும் உண்மை இன்னும் வெளிவரவில்லை. உண்மையை தெரிவிக்க எவ்விதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.*

ஆகையால் யுத்தம் முடிவடைந்தது உண்மைதான். ஆனால், அதற்கு பின்புகூட எமது மக்கள் வாழ்வில் அமைதியும் நிம்மதியும் இன்னமும் ஏற்படவில்லையென்றே கூற வேண்டும்.

இந்திய அரசுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் அதேபோன்று சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளும் இலங்கையரசாங்கத்தால் நிறைவேற்றப்படவில்லையென்ற கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகக் காணப்படுகிறது.

அதேசமயத்தில் இவ்விதமான வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருக்கின்ற நிலையில் இந்தியா இது பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ் மக்களுடைய இன விகிதாசாரத்தை மாற்றி அமைக்கக் கூடிய வகையில் எமது பிரதேசங்களில் கலாசார ரீதியான, இன ரீதியான, மொழி ரீதியான அடையாளங்களை மாற்றியமைத்து பெரும்பான்மை இனத்தவரைக் குடியேற்ற பெரும்பான்மை இனத்தின் மதத்தை, கலாசாரத்தை பரப்புவதற்கு முயற்சி செய்து தமிழ் மக்களின் அடையாளங்களை இல்லாமல் செய்து நிரந்தரமான பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பிரதேசங்களில் இவற்றைப் பார்க்கின்ற போது நடைபெற வேண்டியது நடைபெறாமல் இருப்பது மாத்திரமல்ல, நடைபெறக் கூடாத விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக மக்களுக்கு வசதியீனம் மாத்திரமல்ல, நிரந்தரமாக பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் அங்கே கருமங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதைப் பார்க்கின்ற போது இந்திய அரசின் செயற்பாடு இனி வருங்காலங்களில் முழுமையாக இருக்க வேண்டும். திடமாக இருக்க வேண்டும். இலங்கையரசாங்கத்தை செயற்பட வைக்கக்கூடிய வகையில் இந்திய அரசின் செயற்பாடு அமைய வேண்டும் என்று கூறுவதைத் தவிர நாம் வேறு எதையும் கூற முடியாது.

### இறைமை பகிரப்பட வேண்டும்

இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இறைமை ஒரு இனத்தைச் சார்ந்த மக்களுக்கு உரித்தாக இருக்க முடியாது. ஒரு நாட்டின் இறைமை அந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அந்த இறைமையை மக்கள் அனைவரும் பயன்படுத்தக் கூடிய வகையில் ஆட்சி ஒழுங்கு அமைய வேண்டும். அந்த அடிப்படையில் ஆட்சி முறையொன்றை ஏற்படுத்துவதற்கு எங்களால் இயன்ற அத்தனை முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.

ஆனால், இக்கருமத்தை நிறைவேற்றுவதில் இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பாரிய பங்கு இருக்கின்றது.

இலங்கையில் நீதி நியாயம் நிலவி தமிழ் மக்கள் சமத்துவமாக வாழ இந்தியாவும் சர்வதேசமும் உதவி செய்ய வேண்டுமென வலியுறுத்த வேண்டியது எனது கடமையென்று கருதுகிறேன்.

### சரித்திர ரீதியான தொடர்பு

சரித்திர ரீதியாக நாங்கள் பார்த்தால் இந்தியாவிலிருந்து தான் சிங்கள மக்களாயினும் சரி, தமிழ் மக்களாயினும் சரி, இல்லை முஸ்லிம் மக்களாயினும் சரி வந்திருக்கிறார்கள்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் உள்ள தொடர்பு சரித்திர கலாசார, சமய, மொழி ரீதியாக இருப்பதுபோல் வேறு எந்த நாட்டுக்கும் இல்லை.

இலங்கை இந்தியாவின் அண்டைய நாடு. ஒரு பிராந்திய வல்லரசு. தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டுமென்ற கருமத்தில் ஈடுபட்டிருக்கிறது. அதைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சிகள் எடுத்துள்ளது.

அம்முயற்சி தொடர்ந்து கொண்டு செல்லப்பட வேண்டும். ஒரு நியாயமான நீதியான தீர்வை இலங்கை தமிழ் மக்களுக்கு பெற்றுத்தர வேண்டிய தார்மீகப் பொறுப்பொன்று இந்தியாவுக்கு உள்ளது என நாம் கருதுகின்றோம்.

### ஒப்பந்தங்கள் நிறைவேறவில்லை

தமிழ் மக்கள் திருப்தி அடையக்கூடிய வகையில் கருமங்கள் இலங்கையில் நடைபெறுமாக இருந்தால் எமது பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட வேண்டிய விடயமல்ல. நாங்களே பேசித் தீர்த்து முடிவு கண்டிருப்போம்.

ஆனால், எமது தலைவர்கள் இலங்கையரசுடன் செய்து கொண்ட எந்த ஒப்பந்தமும் நிறைவேற்றப்படவில்லை. இந்தியாவின் கடும் முயற்சியின் காரணமாகத்தான் மாகாண ஒழுங்கு முறை உருவாக்கப்பட்டது.

ஆனால், அதுவும் முழுமையாக உருவாக்கப்படவில்லை. இந்தியாவுக்கு இலங்கை அரசாங்கம் வாக்குறுதி கொடுத்து நாங்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவோம்.

அதற்கு மேலாக அதைக் கட்டியெழுப்பி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்குவோம். அதன் மூலமாக தமிழ் மக்களுக்கு கணிசமான சுயாட்சி கிடைக்கும் என்ற வாக்குறுதியை வழங்கியிருந்தது.

அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு மாறாக 13 ஆவது சரத்தை இல்லாமல் செய்வதற்கும் அதிகாரங்களை குறைப்பதற்கும் மாற்றுவதற்கும் பல முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. இது இந்திய அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும்.

நாங்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து இவ்விடயங்கள் தொடர்பாக விளக்கியிருக்கிறோம். எமது சந்திப்பிற்கு பின்னர் இந்தியாவால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக அவ்வித முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆனால் கைவிடப்படவில்லை.

இன்னுமொரு ஆபத்து இருக்கின்றது. இன்னும் எது நடக்குமென்று கூற முடியாது. ஆனால், இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கத்தினால் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது. ஒரு மாகாண சபை அமைக்கப்பட்டதன் நிமித்தம் பிரச்சினை தீர்ந்து விட்டது என எண்ணக்கூடாது.

**நன்றி இணையம்**

# தொப்புள்கொடி உறவுகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மாநாட்டை புறக்கணியுங்கள்

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை



(சென்னை)

**தமிழக மண்ணில் இசைப்பிரியாவின் கொலை செய்தி பெரும் உணர்ச் சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது. காரணம் இலங்கை ராஜபக்ச அரசு போர்க் குற்றவாளி என்று ஐ.நா அமைத்த குழு, அறிக்கையைத்தந்துள்ளதோடு, போர்க்குற்றவாளியான ஆட்சியாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்தும் உலக நாடுகளிடையே பரவலாகியுள்ளது.

அத்துடன், மனித உரிமை மீறல் குற்றங்களுக்காக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை தலைமையில் விசாரணை செய்யப்பட்டு, அறிக்கை தரும் நிலையுமுள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியினர் அவரை எவ்வளவு கொச்சைப்படுத்த முடியுமோ அவ்வளவு மோசமானமுறையில் கொச்சப்படுத்தி நடந்து கொண்டமையும் உலகறிந்த உண்மைகளாகும்.

தமிழ்நாட்டில் 'டெசோ' உட்பட, பிரதமரோ, இந்திய அரசோ இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஒரே குரலாக, பலரும் பல கட்சிகள், வழக்குரைஞர்கள், விவசாயிகள், மாணவர்கள் முதலிய அனைத்துத் தர்ப்பினரும் பல்வகைபான போராட்டங்களையும் நடத்திய வண்ணமேயுள்ளனர்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் குரல், இதுதான் என்று உணர்த்தும் வண்ணம் மத்திய அரசை நோக்கி முதலமைச்சரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம், அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் வரவேற்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற காங்கிரஸ் கட்சியும் இத்தீர்மானத்தை ஆதரித்தது, இவைகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ள முடிவு செய்தால் தமிழர்களின், உணர்வுகளைப் புண்படுத்துவதும், புறக்கணிப்பதுமான விரும்பத் தகாத செயலாகி, வரலாற்றில் ஆட்சிக்கு என்றென்றும் நீங்காக் கறையாக ஆகிவிடும் என்பதை அவர் உணர்ந்து முடிவு எடுத்தல்வேண்டும்.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது தனது எதிர்ப்பைப் பதிவு செய்வதன் மூலம்தான், இலங்கை போர்க் குற்றவாளி என்பது உறுதி செய்யப்படும் நிலை ஏற்படும் என்று தமிழ்த் தேசிய கூட்டணிக் கட்சி தலைவர் சம்பந்தன் தெளிவாகக் கூறி, தமிழ்நாட்டு ஊடகங்களுக்குப் பேட்டியும் அளித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பு சார்பில் அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவும் வடக்கு மாகாண தேர்தல் ஒழுங்காக நடைபெற முடியாதபடி இராணுவத்தின் ஆதிக்கம் அதிகம இருந்தது என்றும் இதனால் எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் தொடரக் கூடாது எனவும் எனவே, இலங்கையில் தன்னிச்சையான தேர்தல் ஆணையம் அமைக்கப்படல் வேண்டும் எனவும் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

கனேடிய பிரதமர்கூட பொதுநலவாய மாநாட்டை தவிர்க்கின்றார். இப்படியிருக்கையில் நமது இந்திய அரசின் பிரதமருக்கு அவரை விட அதிக பொறுப்புகள் உள்ளன. மேலும், இலங்கையின் தமிழர்கள் இந்தியாவின் தொப்புள்கொடி உறவும் உள்ளவர்கள் ஆயிற்றே!

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் சுட்டுக் கொல்லப்பட்ட படம் தமிழ் நாட்டு மக்களின் மனதில் இன்னமும் நிழலாடிக் கொண்டிருக்கும் நிலையில் இசைப்பிரியா கொலை மேலும் பெரும் உணர்ச்சிக் கொந்தளிப்பை தமிழ் மண்ணில் ஏற்படுத்தியுள்ளது.

13ஆவது சட்டத் திருத்தத்தையோ, தமிழர்கள் அங்கு ஆட்சி அதிகாரத்தைப் பெற வேண்டும் என்பதையோ பொதுநலவாய் மாநாட்டிற்குச் சென்றுதான் நமது பிரதமர் ராஜபக்சவிடம் வற்புறுத்த வேண்டும் என்பதல்ல, எந்த நிலையிலும் பேசலாம், வற்புறுத்தலாம்.மேலும் பல்லாயிரங் கோடி ரூபாய்களையும், ஆய்தங்களையும் கொடுத்து தவிய இந்திய அரசுக்கு இப்படி வற்புறுத்திட உரிமையும், அதிகாரமும் உள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இத்தகைய ஒரு போலிக் காரணம் தேவை இல்லை. நமது நாட்டுப் புறக்கணிப்பு என்பது இலங்கைக்கு மட்டும் எச்சரிக்கை ஆகாது. உலக நாடுகளுக்கும் இந்தியா, இலங்கையைப் பற்றி ஒரு வெளிச்சத்தைக் காட்ட அது உதவிடும்.

இவற்றையெல்லாம் மீறி நமது பிரதமர் மாநாட்டில் கலந்து கொள்ள முடிவு எடுத்தால், தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாம் நமது எதிர்ப்பை அறவழியில் காட்டியாக வேண்டும்.

அவரவர் இல்லங்களிலும், பொது இடங்களிலும் கறுப்புக் கொடிகளை 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையுள்ள மூன்று நாட்களில் பறக்க விட்டு நமது துயரத்தை, எதிர்ப்பை, கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

இது ஒரு கட்சியின் வேண்டுகோள் அல்ல, ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்ச்சிக்கான அறிவிப்பாகும் என்றார். (அ-2)

# இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை வேண்டும்

## பிரிட்டன் தொழிற்கட்சி தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரித்தானிய தொழிற்கட்சியின் தலைவர் மிலிபேண்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாயநாடுகளின்தலைவர்கள்மாநாடுதொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர்களுக்கும் அவருக்கும் இடையில் லண்டனில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில்தொடரும்மனிதஉரிமைமீறல்கள்,போர்க்குற்றங்களுக்குபொறுப்புக்கூற வேண்டிய விடயங்களைக் காரணம் காட்டி நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொழிற்கட்சி இருந்து வருவதை பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்றுள்ளது.

அதேவேளை இலங்கையின் நல்லிணக்கம் என்ற தலைப்பிலான பேரவையின் புதிய அறிக்கையின் பிரதியொன்றும் மிலிபேண்டிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், நில அபகரிப்பு, பொருளாதார அடக்குமுறை மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் தமிழர்களுக்கு எதிராக தற்பொழுதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளமரணங்கள், காணாமற்போனவர்களின்விடயங்கள், காயமடைந்தவர்கள், விதவைகளின் நிலைமைகள் தொடர்பில் மிலிபேண்ட் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

தனது சகாக்களுடன் இந்த விடயங்கள் குறித்து பகிர்ந்து நம்பிக்கையூட்டும் உரிய முனைப்புக்களை மேற்கொள்ளவிருப்பதா கவும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் கார்டியன் பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்த தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நிழல் வெளிவிவகார அமைச்சருமான டக்ளஸ் அலெக்சாண்டர், பிரித்தானிய பிரதமர் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்ததாக தெரிய வருகின்றது. (அ-2)




இலங்கையில் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை நடைபெறும் பொதுநலவாய மாநாட்டினை புறக்கணிக்கக் கோரி நேற்றுமுன்தினம் மாலை லண்டனில் மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றபோது....

## செயலிழந்த நிலையில் மணிக்கூட்டு கோபுரம்



மருதனார்மடம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் கைவிடப்பட்ட நிலையில் சேதமடைந்து காணப்படு கிறது.

குறித்த மணிக்கூட்டுக் கோபுர கடிகாரம் கடந்த சில வருடங்களாக செயலிழந்து காணப்பட்டதுடன் தற்போது மணிக்கூட்டுக் கோபுரமும் சேதமடைந்துள்ளது.

அத்துடன் கடிகாரத்தின் கண்ணாடிகளும் நொருங்கியுள்ளன.

இம் மணிக் கூட்டு கோபுர மணிக்கூடுகள் இயக்கப்படுமாயின் மாணவர்கள், பொது மக்கள் என பலரும் பயன் பெறுவர் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே மருதனார்மடம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுர கடிகாரங்களை செயற்படுத்தவும் கோபுரத்தை புனரமைத்து பராமரிக்கவும் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களால் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)

# தலைவர் படுகொலைக்கு பழிவாங்குவோம் பாகிஸ்தான் தலிபான் கமாண்டர் சூளுரை

(இஸ்லாமாபாத்)

**எங்கள் தலைவனைக் கொன்றவர்களை பழிவாங்குவோம் என வடக்கு வசிரிஸ்தான் தெஹ்ரிக் இ-தலிபான் கமாண்டர் அபு ஓமர் சூளுரைத்துள்ளார்.**



பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பழங்குடியின பகுதியில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில், தெஹ்ரிக்-இ-தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஹக்கீமுல்லா மெஹ்சூத் கொல்லப்பட்டார்.

அவருடன் அப்துல்லா, தாரிக் மெஹ்சூத் மற்றும் ஹக்கீமுல்லா மெஹ்சூத்தின் மெய்காப்பாளன் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

தங்கள் தலைவனைக் கொன்றதில் கடும் ஆத்திரமடைந்துள்ள தலிபான் இயக்கம், இதற்கு பழிவாங்குவதாக மிரட்டல் விடுத்துள்ளது.

முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் எங்கள் பழிவாங்கும் நடவடிக்கை இருக்கும். ஆளில்லா விமான தாக்குதலுக்கு பாகிஸ்தான் அரசு முழு உடந்தையாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். எங்கள் எதிரியை எங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று வடக்கு வசிரிஸ்தான் தலிபான் கமாண்டர் அபு ஓமர் கூறியதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் இத்தகைய செயலால் இரு நாடுகளுக்கிடையிலான உறவு பாதிக்கும் என்றும் இதனை ஏற்க முடியாது என்றும் அமெரிக்காவிற்கு பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் இவ்விவகாரம் தொடர்பாக அமெரிக்க தூதருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தலீபான்களுடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டுவந்தது.



இந்நிலையில் அமெரிக்கா இத்தகைய தாக்குதலை நடத் தியது அமைதி பேச்சுவார்த்தையை தடுப்பதற்காகவே என்று பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் அமைதியை கொண்டுவர நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் இத்தகைய ஏவுகணை தாக்குதல் பாகிஸ்தானுக்கு எதிர்ப்பாக அமையும் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அலிகான் தெரிவித்துள்ளார்.

ஏவுகணை தாக்குதல் அமைதியை கொலை செய்வதாக அமைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான் அந்நாட்டுடனான உறவுகள் குறித்து மறுபரிசிலனை செய்யப்போவதாகவும் அறிவித்துள்ளது என அவர் கூறினார்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் நிலைமை அபாயகரமாகவுள்ளதாகவும் இது பாகிஸ்தானுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்றும் கூறினார்.

அத்துடன் இத்தாக்குதலையடுத்து பாகிலஸ்தானின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.


மேலும் கொல்லப்பட்ட தலிபான் முக்கியஸ்தரின் ஜனாசா நல்லடக்கம் மறைவிடம் ஒன்றில் இடம்பெற்றுள்ளதுடன் ,அது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

இத்தாக்குதலால், பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு பாரிய சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இதனையடுத்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையில் இது குறித்த உயர் மட்டக் கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

வதந்தியால் வந்தது வினை

# புகையிரத விபத்தில் நசுங்கி 10 பேர் பலி!



(விஜயநகரம்)

புகையிரதம் மோதிய விபத்தில் பயணிகள் 10 பேர் பலியாளகினர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு ஆந்திர மாநிலம் விஜயநகரம் வழியாக பயணித்துக் கொண்டிருந்த புகையிரதத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

கேரளாவின் ஆலப்புழா நகரில் இருந்து ஜார்கண்ட் மாநிலம் தன்பாத்துக்கு, பொகாரோ எக்ஸ்பிரஸ் புகையிரதம் இயக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆந்திர மாநிலம் விஜயநகரம் வழியாக சென்று கொண்டிருந்த ஆலப்புழா- தன்பாத் புகையிரதம் தீப்பற்றியுள்ளதாகவும், பெட்டிகள் எரியப்போகின்றன எனவும் எழும்பிய வதந்தியை நம்பிய பயணிகள் சிலர், அபாயச்சங்கிலியை பிடித்து இழுத்து புகையிரதத்தை நிறுத்தியுள்ளனர்.

புகையிரதம் நின்றதும் பலர் புகையிரதத்திலிருந்து கீழே குதித்தனர்.

அப்பொழுது, அருகேயுள்ள மற்றொரு தண்டவாளத்தில் வந்த புகையிரதம் இறங்கிய பயணிகள் மீது மோதியது.

இதில் பயணிகளில் பத்து பேர், பரிதாபமாக பலியாகினர்.

மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். விபத்து நடைபெற்ற பகுதிக்கு, புகையிரத மற்றும் மருத்துவக்குழுவினர் விரைந்துள்ளனர். பலியானோர் எண்ணிக்கை, மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

மத்திய புகையிரத அமைச்சர் மல்லிகாஜ௺ன கார்கே, மீட்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (2)

# தேவாலய நெரிசலில் சிக்கி 17 பேர் பலி; 50 பேர் காயம்!

(லாகோர்)

நைஜீரியாவில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 17 பேர் பரிதாபமாக பலியாகினர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் மேற்கு பகுதியில் உள்ள நிக்போர் நகரில் டொமினிக் கத்தோலிக கிறிஸ்தவ பாதிரியார்கள் தின விழா நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது.

தேவாலயத்தில் இரவு முழுவதும ஏராளமானவர்கள் கூடி பிரார்த்தனையில் பங்கேற்றனர்.

இந் நிலையில் நேற்று அதிகாலை 6 மணி அளவில் அனம்பரா மாகாண ஆளுநர் அங்கு வந்து விழாவில் பங்கேற்றார்.

அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 17 பேர் பலி யாகினர். 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.எனவே, பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது. குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (2)



பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஜமத் உ-தாவா கட்சியின் பிரதிநிதிகள் அமெரிக்க தேசிய கொடியை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

இசைப்பிரியா படுகொலை

# இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும்-ராமதாஸ்

(சென்னை)


விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்த இசைப் ப்ரியா இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான காணொளி காட்சியை சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டுமென பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இசைப்பிரியா குறித்து சனல்-4 தொலைக்காட்சியில், இடம்பெற்றுள்ள காட்சிகள் நெஞ்சத்தை பிளக்கும் வகையிலும், இதயத்தை உலுக்கும் வகையிலும் உள்ளன.

சகதி நிறைந்த குளத்தில் கிடக்கும இசைப்பிரியாவை இலங்கை இராணுவத்தினர் அழைத்து வருகின்றனர். அவர் மீது ஒரு வீரர் வெள்ளைத் துணியை போர்த்துகிறார்.

அப்போது, அவரை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மகள் என்று சில வீரர்கள் கூற, அதை இசைப்பிரியா மறுக்கிறார். அடுத்த காட்சியில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிலையில், படுகாயங்களுடன் பள்ளம் ஒன்றில் அவர் உயிரிழந்து கிடக்கிறார்.



இசைப்பிரியா தொடர்பாக முன்னர், போரின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் அவர் இறந்திருக்கலாம் என விளக்கம் அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், தற்போது வெளியாகியுள்ள காணொளி காட்சிகளைப் பார்க்கும் போது இசைப்பிரியாவை இலங்கை இராணுவத்தினர் பிடித்து பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட கொடுமைகளுக்கு உள்ளாக்கிய பின்னர் படுகொலை செய்திருக்கின்றனர் என்பது உறுதியாகிறது.

இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்பதற்கும், அங்கு போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் பெருமளவில் நடத்தப்பட்டன என்பதற்கும் ஏராளமான ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்டமை குறித்து கருத்து தெரிவித்த மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம், இது மிகவும் கொடூரமானது, மனித உரிமையை மீறிய செயல் எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை பல நாடுகள் கண்டித்த பின்னரும், அது தனது தவறுகளை திருத்திக் கொள்ளாது தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்வளவுக்குப்பின்னரும் இலங்கை மீது நேரடியாகவோ அன்றேல் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் மூலமாகவோ நடவடிக்கை எடுக்க இந்தியா தயங்குவது ஏன்?

இனியும் தாமதிக்காது இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை நிறுத்தவும் அந்த அமைப்பிலிருந்து இலங்கையை நீக்கவும் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தவும் முன்முயற்சி எடுக்க வேண்டும். இதற்கான தீர்மானத்தை ஜெனீவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை ஆணையத்தின் 25 ஆவது கூட்டத்தல் இந்தியா கொண்டு வர வேண்டும் என வலியுறுத்துகிறேன் என டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். (2)

# கருநாட்டுக்கேணி கிராமத்தில் இடைவிலகும் மாணவர்களின் தொகை அதிகரிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கடிதமும் அனுப்பி வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கருநாட்டுக்கேணி கிராமத்தில் பாடசாலை மாணவர்கள் இடைவிலகும் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டி அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி சமூக ஆர்வலர்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலர், கிராம சேவையாளர், அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு யுத்தத்தால் இடம் பெயர்ந்து 27 வருடங்களின் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு கருநாட்டுக்கேணி கிராமத்தில் 224 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இங்குள்ள குடும்பங்களிலுள்ள கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடை விலகும் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதுடன் பாடசாலைக்கு செல்வதில் ஒழுங்கீனமும் காணப்படுகின்றது.

இதில் 10 வயது முதல் 15,16 வயதுக்குட் பட்ட மாணவர்களே அதிகளவில் பாடசாலையிலிருந்து இடைவிலகுகின்றனர்.

கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் இடைவிலகும் மாணவர் தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

கணவனால் கைவிடப்பட்ட மற்றும் கணவனை இழந்த குடும்பங்களில் வாழும் மாணவர்களே வறுமையின் கொடுமையால் இப்படி இடை விலகுகின்றனர்.

எனவே துறைசார்ந்தோர் இம்மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு மாணவர் இடைவிலகல் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)

# நடமாடும் சேவை மூலம் மாதாந்த உதவிப்பணம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மலையாள புரம் , கிருஸ்ணபுரம். பாரதிபுரம், விவேகானந்தநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பொது மக்களுக்கு நடமாடும் சேவையின் மூலம் கொடுப்பனவை வழங்க கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த கிராம மக்கள் 6 கிலோ மீற்றர் தூரம் வந்து கிளிநொச்சி தபாலகத்தின் மூலமே கொடுப்பனவைப் பெற்று வருகின்றார்கள். முதியோர், நோயாளிகள், பெண்கள் மிகவும் சிரமத்துடன் கிளிநொச்சி நகரப் பிரதேசத்திற்கு வந்து இக்கொடுப்பனவைப் பெறுகின்றார்கள்.

இவர்களுக்குரிய கொடுப்பனவை மாதத்தில் ஒருநாள் நடமாடும் சேவையின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது போல பொன்னகர் கிராம மக்களுக்கும் அருகிலுள்ள திருமுறிகண்டி தபாலகம் மூலமாக கொடுப்பனவை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் உப தபாலகம் முல்லைத்தீவு மாவட்டததினுள் வருகின்றது. பொன்னகர் மக்கள் அருகிலுள்ள உப தபாலகத்தை விடுத்து 8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரப் பிரதேசத்திற்கு செல்கின்றார்கள்.

இது தொடர்பான அனுமதி கேட்டு வட பிராந்திய தபால் மா அதிபருக்கு பிரதேச செயலரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (ம-254)






கிளிநொச்சி மாவட்ட தொழில் அலுவலகத்தின் புதிய இரு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், தொழில் திணைக்களத்தின் பொறியியலாளர் புஸ்பகுமார் ஆகியோர் அடிக்கல் நாட்டி வைப்பதையும் யாழ்.மாவட்ட பிரதித் தொழில் ஆணையாளர் கனகசபாபதி கனகேஸ்வரன் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# வளப்பற்றாக் குறைகளுடன் புனித செபஸ்தியார் முன்பள்ளி

(முல்லைத்தீவு)

புனிதசெபஸ்தியார் முன்பள்ளி பல்வேறு பட்ட வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாக மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் அளம்பில் தெற்கு கிராமத்தில் 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இம்முன்பள்ளி மீள்குடியேற்றத்துடன் 2010 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வருகின்றது.

இம் முன்பள்ளியில் 28 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இந்த முன்பள்ளிக்கென 1/2 ஏக்கர் காணியில் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தினால் அரைச்சுவர் கொண்டதாகவும் மேற்கூரை ஓலையால் வேயப்பட்டதாகவும் தற்காலிக கொட்டகை ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. மழை காலத்தில் இங்கு பயிலும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த முன்பள்ளிக்கு மின்சார வசதி, நூலக வசதி, குடிநீர் வசதி எதுவும் இல்லை. விளையாட்டுத் திறன் விருத்திக்கு விளையாட்டுமுற்ற வசதி, கற்றல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் என்பனவும் இல்லை. மாணவர்களுக்கான சீருடையும் வழங்கப்படவில்லை.

முன்பள்ளியைச் சுற்றி பாதுகாப்பு வேலி உள்ள போதிலும் அது சீரானதாக இல்லை. இதனால் கட்டாக்காலிகள் முன்பள்ளியை அசுத்தம் செய்கின்றன.

எனவே, உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# கரைச்சியில் காணிக்கச்சேரி

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாயவனூர், பாரதிபுரம், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு ஆகிய கிராமங் களில் காணிக்கச்சேரி நடைபெறவுள்ளது.

உதயநகர் கிழக்கு கிராமத்தில் இன்றும் எதிர்வரும் 7ஆம் திகதிகளிலும் மாயவனூர் கிராமத்தில் எதிர்வரும் 8, 11 ஆம் திகதிகளி லும் பாரதிபுரம் கிராமத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதியும் உதய நகர் மேற்கு கிராமத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இக்காணிக்கச் சேரிகள் யாவும் அந்தந்த கிராமங்களிலுள்ள பொது நோக்குமண்டபங்களில் இடம் பெறவுள்ளன.

இதில் அனைத்து பொது மக்களையும் கலந்து பயன் பெறுமாறு கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ் வரன் அறிவித்துள்ளார். (ம-254)

# ஆவண ங்களை பெறுவதற்கான விழிப்புணர்வு செயலமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளகுடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் நலன் கருதி யு.என். எச்.சி. ஆர். நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் மக்கள் தமது குடியியல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை அளம்பில் வடக்கு, தெற்கு கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு அளம்பில் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஹிஜ்ராபுரம் கிராம மக்களுக்கு ஹிஜ்ராபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும் எதிர்வரும் 12 ஆம் திகதி சிலாவத்தை தெற்கு, சிலாவத்தை கிராம மக்களுக்கு சிலாவத்தை கிராம அலுவலர் அலுவலகத்திலும் எதிர்வரும் 14ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு கிராம மக்களுக்கு முள்ளிவாய்க்கால் மேற்கு பொது நோக்கு மண்டபத்திலும் இடம்-பெறும்.

மேலும் கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி ஆகிய கிராம மக்களுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி கொக்கிளாய் மேற்கு பொது நோக்கு மண்டபத்திலும் எதிர்வரும் 21 ஆம் திகதி நீராவிப்பிட்டி கிழக்கு, மேற்கு கிராம மக்களுக்கு நீராவிப்பிட்டி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்திலும் எதிர்வரும் 26 ஆம் திகதி மதவளசிங்கன்குளம், குமாரபுரம் ஆகிய கிராம மக்களுக்கு முறிப்பு பொது நோக்கு மண்ட பத்திலும் எதிர்வரும் 28 ஆம் திகதி கொக்குத் தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராம மக்களுக்கு கொக்குத் தொடுவாய் தெற்கு பொது நோக்கு மண்டபத்திலும் மேற்கண்ட விழிப்புணர்வு செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் காலங்கடந்தபிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் என்பவற்றை எவ்வாறு பொது மக்கள் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் இதில் தவறாது கலந்து கொண்டு பயனடை யுமாறும் கரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலர் இ.குருபரன் அறிவித்துள்ளார். (ம-267)

# என் கண்ணோரக் கனவுகளில் கவிதை நூல் வெளியீட்டு விழா

(முல்லைத்தீவு)

**என் கண்ணோரக் கனவுகளில்** எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட் கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் செ.அல்பிரட் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலாசிரியர் பி.ஜதீஸ்குமாரால் ஆக்கப்பட்ட இந்நூலின் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.இராஜ்குமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-267)

பெருமையை மூன்று அறிகுறிகளால் தெரிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை, செயலில் மனிதத்தன்மை, வெற்றியில் வெற்றியின்மை.

*- ஓர் அறிஞர்.*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

சனல் 4 வெளியிட்டுள்ள இசைப்பிரியா உயிருடன் இராணுவத்தின் கையில் பிடிபட்டிருக்கும் காட்சிகளும், பாலியல்ரீதியாக வதைக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்களும் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொடூரங்களை மேலும் நிரூபிக்கும் வலுவான சான்றாக அமைந்துள்ளது. இசைப்பிரியா மீதான பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த வீடியோ ஆதாரமும் கடந்த வாரம் பிபிசி வெளியிட்டிருந்த பெண்ணொருவர் விசாரணைகளின்போது தொடர்ச்சியாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை பற்றிய ஆதாரமும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் அதன் பின்னரும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகள்மற்றும் பெண்கள்மீதான பாலியல் வதைகளை வெளிப்படுத்துவதாகவுள்ளன. அது மட்டுமன்றி யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கடந்த பின்னரும் தமிழினத்தை இல்லாது அழிக்கும் நோக்கில் கட்டமைப்புசார் (structural) இன அழிப்பு பல்வேறு கோணங்களில் திட்டமிட்டு அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இசைப்பிரியா மீதான பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை உட்பட நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். மேற்படி குற்றச்செயல்களில் ஈடுபட்ட தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவம் வட கிழக்கில் நிலைகொண்டிருக்கும் வரை அவ்வாறான விசாரணை மேற்கொள்வது சாத்தியமற்றது. எனவே வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இலங்கை அரசியல் அமைப்பிற்கு வெளியில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்பட்டு சுதந்திரமான, சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். இதன்மூலமே இனப் படுகொலை தொடர்பான சாட்சியங்களை திரட்டுதல், சாட்சியங்களை பாதுகாத்தல், குற்றவாளிகள் தண்டிக்கப்படுதல், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நீதி பெற்றுக் கொள்ளுதல் என்பனவும், தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் கட்டமைப்புசார் இனஅழிப்பைத் தடுத்து நிறுத்துவதும் நடைமுறைச் சாத்தியமாகும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நம் தலைவிதி இதுதான் என்று தமிழ் மக்களை நோகவிடாதீர்கள்

தலைவிதி என்று பேசப்படும் போதெல்லாம் அப்படியொன்று உண்டா? என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இப்போது எங்கள் தமிழினத்தின் நிலைமைகளைப் பார்க்கும்போது தலைவிதி என்ற ஒன்று இருக்கவே செய்கிறது என உறுதி செய்ய முடிகிறது.

அதேநேரம் நம் தமிழ் மக்கள் பாவங்கள் என்று சொல்வதை விட வேறு எதனையும் இப்போதைக்கு கூறமுடியாதுள்ளது:

வடக்கு மாகாண அரசு ஆட்சிக்கு வந்தால் எங்களின் பிரச்சினைகள் ஓரளவுக்கேனும் தீரும் என்று மலையாய் நம்பினோம்.

ஆனால் வடக்கு மாகாண அரசு இப்போது விழாக்களில் பங்குபற்றி தங்களின் கௌரவத் தேவைக்கு உரு ஏற்றிக் கொள்வதையே செய்து வருகிறது.

எங்களிடம் இதுவரை இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதுவும் இல்லாதது போலவே, வடக்கு மாகாண அரசும் வடக்கில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய எந்தத் தயாரிப்பும் இன்றி, உரையாற்றுவதிலும் அறிக்கை விடுவதிலும் தங்கள் இருப்பைத் தக்க வைக்கின்றன.

வடக்கு மாகாண அரச பிரதிநிதிகள் மேடைப் பேச்சிலும் ஊடக அறிக்கையிலுமே அபிவிருத்தியை முன்னெடுப்பதாக இருந்தால், இதனை மிகச் சிறப்பாகச் செய்யக்கூடியவர்களை தேர்தலில் நிறுத்தியிருக்கலாம்.

தனித்து ஊடகங்களுக்கு பேட்டி கொடுப்பது, ஊடக அறிக்கை விடுவது, மேடைகளில் கர்ச்சிப்பது என்ற நடைமுறைகளுக்கு இப்போது மக்கள் இடம்கொடுப்பதில்லை என்பதையேனும் வடக்கு மாகாண அரசு அறிந்து கொள்வது நல்லது.

வடக்கு மாகாணத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றமை மற்றும் பொறுப்பான அமைச்சுக்களைப் பெற்றுக் கொண்டமை என்பது எப்போதும் பெருமைக்குரியதாக இருந்துவிடாது.

சிலவேளைகளில் கிடைத்த பதவிகளே இருந்த கௌரவத்தையும் அள்ளி அடித்துக் கொண்டு போய்விடும் என்ற யதார்த்தத்தையும் தெரிந்து கொண்டு சாணக்கியமாகச் செயற்பட வேண்டும்.

சொந்த விருப்பு வெறுப்புகள், ஊர்ப்பற்றுகள், உறவுகளின் நினைப்புகள் என யாவற்றையும் அரசியல், ஆட்சி என்று வந்துவிட்ட பின் முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

வடக்கு மாகாண அரசின் உறுப்பினர் ஒருவரை பொதுமக்கள் சந்தித்தால், அவர்களின் பிரச்சினைகளை செவிமடுக்கப் பழகிக் கொள்வதும் கட்டாயம்.

தேர்தலில் போட்டியிட்டு கைகூப்பி வாக்குப் பெற்று ஆட்சிக்கு வந்தபின் பொதுமக்களுடன் ஏறுமாறாக நடந்து கொண்டால் உங்களை ஆட்சிப் பீடத்தில் இருத்திய அதே மக்கள் உங்களை கீழே வீழ்த்தவும் தயங்கமாட்டார்கள் என்ற நிதர்சனத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் மக்கள் தொடர்பாடலை அமைத்துக் கொள்ளுங்கள்.

# ஒருநாள் மீன்பிடிக்கான கோரிக்கை நிராகரிப்பு

இலங்கை கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் வாரத்தில் ஒருநாள் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியா விடுத்த கோரிக்கையை இலங்கை நிராகரித்துள்ளதாக தெரிய வருகின்றது.

இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகளுக்கும் இலங்கையின் கடற்றொழில் அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த யோசனையை இலங்கை நிராகரித்துள்ளது.

எனினும் இது தொடர்பில் இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவோ அல்லது இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகளோ கருத்துக்கூற மறுத்துவிட்டனர்.

இந்திய அரசாங்கத்தின் கோரிக்கை யாழ்ப்பாணத்திலுள்ள மீனவர்களிடம் முன்வைக்கப்பட்டபோது அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

இதனையடுத்தே இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

தமிழகத்தின் கொந்தளிப்பை தணிக்கும் வகையிலேயே இந்திய மத்திய அரசாங்கம் இந்த யோசனையை முன்வைத்தது.

எனினும் ஒருநாள் தமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட தமிழக மீனவர்களை அனுமதித்தால் அவர்கள் தமது முழு மீன் வளங்களையும் நாசப்படுத்தி விடுவர் என்று உள்ளூர் மீனவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை தூதரும் தமிழக மீனவர்களின் கடல் அத்துமீறல் தொடர்பில் விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்.

எனினும் இலங்கை அரசாங்கம் இன்னும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்ளவில்லை. (அ-2)

# வடபகுதிக்குச் செல்ல எந்தநாடும் கோரிக்கை விடுக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தரும் குழுவினர் வடக்குப் பகுதிக்குச் செல்ல விரும்புவதாக இதுவரை எந்த நாடும் கோரிக்கை விடுக்கவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கை வெளிவிவகார செயலர் கருணாதிலக அமுனுகம,

பொதுநலவாய மாநாட்டுக்கு வரும் தமது நாட்டின் தலைவர் அல்லது உயர்நிலைப் பிரதிநிதிகள், வடபகுதிக்குச் செல்ல விரும்புவதாக எந்தவொரு நாடும் இதுவரை கோரிக்கை விடுக்கவில்லை.

ஆனால் அவர்கள் அத்தகைய கோரிக்கையை முன்வைப்பார்களேயானால் அதற்கான வசதிகளை தாம் ஏற்படுத்திக் கொடுக்கத் தயார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரே மக்கெல்லியும் தாம் வடக்குப் பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

எனினும் எப்போது பார்வையிடுவர்? என்ற விபரத்தை அவர்கள் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முஸ்லிம் மக்களுக்கு கூட்டமைப்பு உதவவேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு முஸ்லிம் மக்களுக்கு ஆதரவையும் உதவிகளையும் வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கு உதவ முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

கூட்டமைப்பு வடக்கில் உள்ள முஸ்லிம்களுக்கு ஆதரவு வழங்கினால், கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு ஆதரவு வழங்க முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து பணியாற்றலாம்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு உத்தியோகபூர்வமாக அன்றி ஒரு முறைசாரா அளவில் இருக்கும் என்றார். (அ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கடவுள் எங்கே இருக்கிறார்?



கடவுள் எங்கேயோ இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவன் மனிதனின் மன இயக்கத்தில் இருக்கிறான். ஆம், தெய்வம் அதற்குள்ளாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. வேறுவேறாக இல்லை, இறைவன் மனிதனிடம் ஒன்றுபட்டுத்தான் இருக்கிறான்.

ஆனால் மனிதனுடைய எண்ணத்தின் காரணமாக, இச்சையின் காரணமாக, பல பொருட்களின் மீது வைத்திருக்கிற ஆசையின் காரணமாக இறைவன் தூரத்தில் இருப்பது போல் மனிதனுக்குத் தோன்றுகிறது. இச்சையின் அடுக்குகளே இறைவன் தூரத்தில் இருப்பது போல் செய்து வருகின்றன.

நமக்கும் கடவுளுக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று ஒரு கணக்கெடுக்க வேண்டுமா? எத்தனை பொருட்களின் மீது ஆசை இருக்கிறதோ வரிசையாக எழுதிப் பட்டியலிட்டால் அது இருக்கும் நீளத்தைக் கொண்டு இவ்வளவு தூரம் தான் நமக்கும் கடவுளுக்கும் இருக்கக்கூடிய தூரம்.

பொருட்களின்மீது இருக்கக்கூடிய ஆசைகள் எவ்வளவோ, அந்த அளவுக்குக் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள தூரம் அதிகமாகும். ஆகவே, ஆசை என்பதைச் சீரமைத்து விட்டோமேயானால் இறைவனைக் காணலாம்.

ஆசையை அனுமதித்துக்கொண்டே இருந்தால், அதை ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு ஆண்டும் செயலாக்கிக் கொண்டுதான் இருப்போம். ஆனால் ஆசை சீரமைக்கப்பட்டது என்றால் ஒரு பளுவும் இல்லை. ஆகையினால் மனம் துல்லியமாக, நிறைவாக இருக்கும். அங்கே இறைவன் இருப்பான்.

# தம்புள்ள கோயில் இடிப்பை தடுத்து மக்களை மீள்குடியமர்த்துங்கள்

## ஜனாதிபதியிடம் சிறீதரன் எம்.பி.கோரிக்கை

**(தம்புள்ள)**

**தம்புள்ள காளிகோயில் இடிப்பு தொடர்பில் யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் வாழமுடியாத நிலை தொடர்ந்தும் இலங்கையில் மேற்கொள்ளப்படுவதைத் தாங்கள் அறிவீர்கள் என எண்ணுகின்றேன்.

தமிழர்க ளின் இன அழிப்பின் ஒரு வடிவமாக தம்புள்ள காளிகோவில் இடிக்கப்பட்டு அப் பகுதியில் வாழ்ந்த நாற்பது தமிழ்க் குடும்பங்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் சொந்த மண்ணில் தம் உணர்வுகளைப் பிரதிபலித்து தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றி வணக்கம் செலுத்தும் உரிமை இலங்கை மண்ணில் தமிழர்களுக்கு மறுக்கப்படுவது இதுதான் முதற்தடவையல்ல.

அண்மைக்காலங்களாக தமிழர்களின் வணக்கத்தலங்கள் அழிக்கப்படுதல், களவுகள் மேற்கொள்ளப்படுதல், கொலை செய்துவிட்டு உடலங்களை இந்துக் கோவில்களில் வீசிவிடுதல் மிகச் சாதாரணமாக தமிழர் பிரதேசங்களில் நடைபெறுகின்றன.

இதன் உச்சக்கட்டமாக தம்புள்ள காளி கோவில் இடிக்கப்பட்ட இடத்தில் மக்கள் அடியோடு துரத்தப்பட்டு பின்னர் அப்பிரதேசத்தில் மண் தோண்டியெடுக்கப்பட்டு அவ்விடம் குளமாக்கப்பட்டு மீண்டும் தமிழர் அதில் குடியேறி வாழமுடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்திற்குப் பின்னால் தர்மத்தைக் போதிக்கும் பௌத்த பிக்கு ஒருவரின் செயற்பாடு பிரதானமாகவுள்ளது.

பல ஆண்டுகளாக நடைபெறும் தமிழின அழிப்பின் உச்சக்கட்ட வடிவங்களில் ஒன்றாகவுள்ள இத்தம்புள்ள காளிகோவில் இடிப்பைத் தடுத்து நிறுத்தி அம்மக்கள் அங்கு குடியேறி வாழ்வதற்கு இந்நாட்டின் முதற் குடிமகன் என்ற வகையில் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக்கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதாக முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராமங்களில் இரவு நேரங்க ளில் நுழையும் யானைகள் நெல் மூடைகள் மற்றும் பயன்தரு மரங்களை அழித்துச் செல்வதாக பிரதேச செயலாளரிடம் அப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

மேற்படி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட காப்புக்குத்தி, நயினைமடு, சின்னடம்பன், மாராஇலுப்பை மற்றும் குளவி சுட்டான் ஆகிய கிராமங்களிலேயே இவ்வாறு யானைகள் புகுந்து நாசம் செய்வதாக குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னி பகுதியில் மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ள நிலையில், தண்ணீர் தேடி யானைகள் இரவு வேளையில் ஊர்களுக்குள் வருவதாகவும் இதனால் தாங்கள் நித்திரையின்றி அச்சத்துடன் தவிப்பதாகவும் மக்கள் பிரதேச செயலாளருக்கு தெரிவித்துள்ளனர். (ம-250)

## கந்தசஷ்டி விரதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலய கந்தசஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 5 தினங்கள் இடம் பெறவுள்ளது.

5 ஆம் நாள் 2 மணிக்கு சூரன்போர் நிகழ்வும் மறுநாள் திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-263)

## தென்பகுதி மக்கள் அனுபவிக்கும் உரிமைகளை தமிழ் பேசும் மக்களும் அனுபவிக்க வேண்டும்

### வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

எனது சேவையானது கிராமங்களில் ஆரம்பித்து நகரங்களுக்கு செல்லும். முப்பது வருடகால யுத்தம், சுனாமி போன்ற அனர்த்தங்களினூடாக துவண்டு கிடக்கின்ற எமது மக்களுக்கு உடனடித் தேவையாக அபிவிருத்தி தேவைப்படுகின்றது.

எனவே, தென்பகுதி மக்கள் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகளையும் எமது தமிழ் பேசும் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்று வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரும் சட்டத்தரணியுமான பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார், மாந்தை மேற்கு பகுதிக்கு வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சரின் விஜயத்தையொட்டி வரவேற்பு உபசாரம் ஒன்று தேவன்பிட்டி மக்களால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வு மன்னார் மாவட்டத்தின் எல்லை கிராமமான தேவன்பிட்டியில் 01.11.2013 வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பமானது.

அந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தென்பகுதி மக்கள் அனுபவிக்கின்ற அனைத்து உரிமைகளையும் தமிழ் பேசும் மக்கள் அனுபவிப்பதற்கான அனைத்து நகர்வுகளையும் வடமாகாண சபை மேற்கொள்ளும். அடிமட்டத்தில் இருக்கின்ற கிராமங்கள் அனைத்தும் மற்றைய கிராமங்கள் போன்று எதிர்வரும் காலங்களில் தரம் உயர்த்தப்படுவது உறுதியாகும். அதற்கான அபிவிருத்திகளை எனது அமைச்சினூடாக வழங்கக் கூடிய அனைத்து திட்டங்களின் வழியாக நான் வழங்குவேன். மீனவ கிராமங்களுக்கு எதிர்காலத்தில் நவீன மீன்பிடிமுறைகள் அறிமுகம் செய்யப்படும். தொடர்ந்து எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் அபிவிருத்திக்கும் அப்பால் செல்ல வேண்டும் என்ற வகையில் கிராமங்களுக்குள் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமானது என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் வெள்ளாங்குளம் கிராமத்து மக்களையும், பாலியாறு கிராம மக்களையும் சந்தித்து அவர்களது நிலைமைகளை அறிந்து கொண்டதோடு, மூன்றாம் பிட்டி கிராமத்துக்கு சென்று தனக்கு அங்கு வழங்கப்பட்ட வரவேற்பை ஏற்றுக் கொண்டு அந்தக் கிராம மக்களோடும் கலந்துரையாடிய பின்னர், இந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்களையும் பாராட்டுக்களையும் வழங்கினார். (ம-4)




## கடற்றொழில் உபகரணங்களை வழங்கி வாழ்வாதாரத்திற்கு உதவுங்கள்

### நாயாறு மீனவர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)



முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் செம்மலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள நாயாறு மீனவர்கள், தமது வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலை மேற்கொள்வதற்கு கடற்றொழில் உபகரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.

போரின் கொடுமையால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்டு 72 மீனவ குடும்பங்கள் கடந்த 2010ஆம் ஆண்டில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் 5 குடும்பங்களுக்கு பாசிக் நிறுவனத்தினால் 5 குல்லாக்களும் 25 வலைத் தொகுதிகளும் 6 குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தினால் 6 குல்லாக்களும் 10 குடும்பங்களுக்கு எப்.ஏ.ஓ நிறுவனத்தினால் 10 குல்லாக்களும் 20 வலைத் தொகுதிகளும் வழங்கப்பட்டன.

ஏனைய குடும்பங்களுக்கு எவ்வித கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்படவில்லை. மிகுதியானவர்களில் பெருங்கடல் தொழிலாளர்கள்25 பேருக்கும் சிறு கடல் தொழிலாளர்கள் 15 பேருக்கும் உடனடியாக கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

எனவே உரிய தரப்பினர் இம்மக்களின் நலனைக்கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)



பாராளுமன்ற உறுப்பினர் சி.சீறிதரனால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் 2013 இன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிப் பங்களிப்பினூடாக கல்மடுநகர் நாவல்நகர் கிராமத்தில் கலைக்கதிர் சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நாவல்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பெனடிக்ற் மனோகரன் தலைமையில் நடைபெற்றபோது...

## மதுப்பிரியர்களின் அட்டகாசம்; பயணிப்போர் திண்டாட்டம்


(கண்டாவளை)

பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி மாலை வேளைகளில் பயணிக்கும் தனியார் பேருந்துகளில் பலர் மதுபோதையில் பயணிப்பதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு 7,8 மணி ஆகிய நேரங்களில் பயணிக்கும் பேருந்துகளிலே இவ்வாறான நிலைமை பெரிதும் காணப்படுகின்றது.

இரவு 7 மணிக்கு புறப்படும் பேருந்தை தவறவிடுபவர்கள் மேலும் ஒரு மணி நேரம் தரிப்பிடத்தில் காத்திருந்து இரவு 8 மணிக்கு புறப்படும் முல்லைத்தீவிற்கான இறுதி பேருந்திலே பயணம் செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய வெளி மாவட்டங்களில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் வரும் பயணிகளாலும் 8 மணி வரை காத்திருந்து பயணிக்கும் பயணிகளாலும் பேருந்து நிரம்பி வழிகின்ற நிலையில் மதுப் பிரியர்களின் தொல்லை தாங்க முடியாதுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-263)





இலங்கை கிரிக்கெட் அணி யின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ். சென் பற்றிக்ஸ் கலலூரிக்கு விஜயம் மேற்கொண டுள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நல்லிணக்கத்திற்கான முரளி வெற்றிக் கிண்ண இருபது - 20 போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் வட மாகா ணத்தின் 5 இடங்களில் இடம பெறுகின்றது.

இந்த போட்டியில் பங்குபற் றும் வீரர்களுக்கு ஆலோசனை களை வழங்கி உற்சாகப்படுத்து வதற்காகவே குமார் சங்கக்கார வட மாகணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங் களில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளினை காலை பார்வை யிட்ட பின்னர் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு வருகை தந்திருந்தார்.

# மாநாட்டில் கலந்து கொள்...

திராவிட முன்னேற்ற கழகத்தின் கோரிக்கையை ஏற்கும் வகையில் தீர்மானம் எட்ட வேண்டும் என்று ப.சிதம்பரம் வலியுறுத்தி வருகிறார்.

ப.சிதம்பரம, ஜி.கே.வாசன் இரு வரின் எதிர்ப்புக்கு வலுசேர்க்கும் வகையில் மத்திய பாதுகாப்பு அமைச சர் ஏ.கே.அந்தோணியும் பிரதமர் இலங்கை பயணத்தை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்துள் ளார்.

எனினும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் மற்றும் வெளியுறவுத்துறை உயர் அதகாரிகள் பொதுநலவாய மாநாட டில் பிரதமரை கலந்து கொள்ள வைத்து விட வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பதாக காங்கிரஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் இலங்கை பயணத் துக்கான ஏற்பாடுகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுநலவாய மாநாட்டுக்கு இன்னும் 8 நாட்களே உள்ள நிலை யில பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை பயணம் கேள்விக்குறி யாக நீடிப்பதாக நேற்று முன்தினம் தி.மு.க. தலைவர் மு.கருணா நதியை சந்தித்த பின்னர் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித் துள்ளார்.

எதிர்வரும் சில தினங்களில் பிரதமர் தனது முடிவை அறிவிப் பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - பொதுநலவாய மாநாடு தொடர்பில் காங்கிரஸ் உயர்மட்டக் குழு முடிவைக் கைவிட வலியுறுத்தி நாளை மறுதினம் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

இதுகுறித்து அந்த கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

காங்கிரஸ் கட்சியின் உயர்மட் டக் குழு கடந்த மாதம் 30 ஆம் திகதி டில்லியில் கூடி இதுபற்றி தீர்மானம் வெளியிட்டிருந்தது.

அந்தகுழுவில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்க வேண்டும் என்ற முடிவை மேற் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

காங்கிரஸ் உயர்மட்டக் குழு வின் இந்த தீர்மானம் தமிழக அரசி யல் கட்சிகளியே தீவிர நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசு பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழ்த் தேசிய அமைப்புகளும் ஒருமித்த நிலைப் பாட்டில் வலியுறுத்தி வருகின்றன.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காமல் இந்திய அரசாங் கம் புறக்கணித்துவிட்டால் இரு நாடுகளிடையேயான அரச உறவுகள் பாதிக்கப்படும் என்பது போலியான கருத்து என்றும் தொல்.திருமா வளவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய மாநாடு நடை பெற உள்ள நிலையில் செனல் 4 தொலைக்காட்சி தமிழீழ விடு தலைப் புலிகளின் ஊடகப் பிரிவில் பணியாற்றிய இசைப்பிரியா பற்றிய காணொளியை வெளியிட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## கரவெட்டி அணி இறுதியாட்டத்திற்கு

இமையாணன் மைதானத்தில் கர வெட்டி பிரதேச செயலகத் திற்கும் (எதிர்) நல்லூர் பிரதேச செயலகத்திற்கும் இடை யில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட் டத்தில் 3-0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலகம் வெற்றிபெற்றது.

இதில் கரவெட்டி பிரதேச செயலகத்தை சேர்ந்த வ.மனோ ஒரு கோலையும் ம.சதீஸ கரன் (ராஜா) 2 கோல்களையும் அடித்து கரவெட்டி பிரதேச செயலகத்தை வெற்றிபெறச் செய்தனர்.

# இந்தியப் பிரதமர்...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் எழுதியிருந்த கடிதத்தில அவரை யாழ்ப்பாணம் வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க இந்தியப் பிரதமர் இலங்கை செல்வாரேயா னால் அவர் வட மாகாண முதல மைச்சரின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் செல்லலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் கொழும்பில் இம்மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் கலந்து கொள்வதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இதுவரை எவ்வித முடிவையும் அறிவிக்கவில்லை. இந்நிலையில் இந்தியப் பிரதமர் மன்மாகன் சிங்கின் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பு சென்று அவரின் விஜயத்துக்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்ட தாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் கிளம்பியுள்ள பலத்த எதிர்ப்பையும் மீறி பொது நலவாய மாநாட்டில் பங்கேற்கும் முடிவை எடுத்தால் வடக்குக் கிழக் குக்கு சென்று அங்குள்ள தமிழ் மக்களின் நிலைமைகளை பார்வை யிடுவதன் ஊடாக இவ்விகாரம் தொடர்பிலான அழுத்தங்களை ஓரளவு தணிக்கலாம் என சில அமைச்சர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஆலோ சனை வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-4)

# வட- கிழக்கு எங்கும்...

தமிழ்த் தேசிய வரலாற்றில் இவ் அறவழிப் போராட்டம் முக் கியத்தும் வாய்ந்ததாக கருதப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டிற்காக கூடியுள்ள நேரத்தில், இம் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை இவ் அறவழிப் போராட் டம் யாழ்.நகரில் 15ஆம் திகதி ஆரம்பமாகி வடகிழக்கில் உள்ள அனைத்து பிரதேசங்களிலும் முன் னெடுக்கப்படவுள்ளது எனவும் அர சாங்கம் தமிழ் மக்களிற்கு இழைத்த அநீதிகளினையும் கொடுமைகளி னையும் உலகத் தலைவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென் பதற்காகவே இப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ தேசிய தொலைக்காட் சியின் செய்தி வாசிப்பாளரான இசைப்பிரியா இராணுவத்தினால் உயிருடன் பிடிக்கப்பட்டு மோச மான முறையில் கொலை செய்யப் பட்டுள்ளமை தொடர்பான புதிய போர்க்குற்ற ஆதாரத்தினை சனல் 4 தொலைக்காட்சி கடந்த 3 தினங் களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது.

இதற்கு முன்னதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகனான பாலச்சந்திரன் இராணுவ முகாம் ஒன்றிற்குள் பிஸ்கற் சாப்பிட கொடுத்துவிட்டு கொல்லப்பட்டுக் கிடக்கும் ஆதாரத் தையும் சனல் 4 வெளியிட்டிருந்தது.

சனல் 4 தொலைக்காட்சி காணொளி போர்த் தவிர்ப்பு வல யம் என்ற இரு நிலையில் அரசின் போர்க் குற்றங்களை ஆதாரங் களுடன் வெளியிட்டு இலங்கையை மிகவும் நெருக்கடிக்குள் தள்ளி யிருந்தது.

இராணுவம் இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் பல் லாயிரக்கணக்கான மக்களினை கொன்றமை மற்றும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியமை உள்ளிட்ட அனைத்து போர் விதி மீறல்களுக்கும் இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை வேண்டும்என்ற கருத்து வலுப்பெற்று வருகின்ற நிலையில் இசைப்பிரியா கொல்லப்பட்ட ஆதாரம் தற்போது வெளிவந்துள்ளது.

இதனால் சர்வதேச விசாரணை என்ற கோரிக்கை உலக நாடுகளில் மீண்டும் வலுப்பெற்றுள்ளது.

இந் நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் பொதுநலவாய மாநாட்டிற்காக உலகத்தலைவர் கள் கொழும்பில் ஒன்று கூடவுள்ள னர். இதில் உலகத் தலைவர்களின் கவனத்தினை, கொடுமைகளை அனுபவித்த தமிழர்கள் மீது திருப் பவும் இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணை அவசியம் என்ற கோரிக கையையும் வலியுறுத்தியே போராட டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனைவிட தமிழரின் தாயக நிலங்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுகின்றமை. இராணுவ அடக்குமுறைகள். அரசியல் கைதி கள் காலவரையறையின்றி சிறை களில் அடைக்கப்பட்டுள்ளமை ஊடக அடக்குமுறைகள் என்பன தொடர்பிலும் உலகத்தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எமது இனத்தின் மீது இழைக் கப்பட்டுள்ள கொடுமைகளுக்கு எதிராகவும் அரசின் போர் விதி மீறல்களுக்கு சர்வதேச விசாரணை யினை வலியுறுத்தியும் இடம்பெற வுள்ள இப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளையும் தொழிற்சங்கங் களையும் அமைப்புகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இதனைவிட தமிழகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வடக் குக் கிழக்கில் இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் போராட்டங்களை முன் னெடுக்குமாறும் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

தமிழினத்திற்கு இலைக்கப்பட் டுள்ள அநீதிகளுக்கு எதிராக உல கம் முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழர்கள் அனைவரும் இந்த 5 நாட்களும் ஒன்று சேர்ந்து குரல் எழுப்புவோம் என்றார் பாராளு மன்ற உறுப்பினர் சிறிதரன்.

அனைத்துக் கட்சிகளும் கட்சி வேறுபாடு இன்றி இதற்கு ஒத் துழைப்பு வழங்குமாறும் பொது மக கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறும் அவர் கோரியுள்ளார். (எ-4)

# பத்தாயிரம் இலங்கை...

மேலும் பெண்கள் உட்பட ஏனைய 6,000 பேரைப் பொறுத்த வரையில் சட்ட விரோதமாக தங்கி யிருந்தாலும் சவுதி அரேபிய அர சாங்கத்தின் பொதுமன்னிப்பு வரை யறைக்குள் அவர்கள் உட்படாதவர் கள் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அதாவது விசா இன்றி தங்கி யிருந்தமை, கைவிரல் அடையாளங் கள் பதிவு செய்யாமை போன்ற அந்த நாட்டு சட்ட திட்டங்களை இவர்கள் மீறியதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்படியானவர்களை நாட்டுக்கு திருப்பி அழைப்பதற்கான முயற்சி கள் சவுதியில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்டு வந்தாலும் அவர் களை நாட்டுக்கு அழைப்பது தொடர் பில் பிரச்சினையாகவே உள்ளது என்றும், ஆயினும் இதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெ டுக்கப்படுகின்றன என்றும் மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

பொதுமன்னிப்புக் காலத்துக் குள் வெளியேற வேண்டுமென்ற அறிவிப்பு வெளியானதும் தாங்கள் பெரும் அதிர்ச்சிகுள்ளாகியதாக நாடு திரும்பியவர்கள் தெரிவித்த னர். (செ-4)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா செல்லம்மா



புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி செல் லையா செல்லம்மா 03.11.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் (சிங்கப்பூர் போசனசாலை-உரிமையாளர்) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

(4414) (க.கமலாம்பிகை-மருமகள்)

# பொன்னான சந்தர்ப்பம்

**புத்தம் புதிய வரவு...**

IT டிப்ளோமாதாரிகள் அவுஸ்ரேலியாவில் படிக்க உழைக்க தாமாக நிரந்தரக் குடியுரிமை 2 வருடத்தில் பெற அரிய வாய்ப்பு

**இது தொடர்பான சகல சட்ட ஆவணங்களையும் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்**

**நிபந்தனைகள் :-** விசா துணைவகுப்பு 457


- IT துறையில் ஆங்கில மொழி மூலமான டிப்ளோமா. 40 வயதுக்குக் கீழ்.
- குடும்பமாகச் சென்று 2 வருடத்தில் நிரந்தர குடியுரிமை பெற சட்ட ரீதியாக வாய்ப்பு.

(C-5357)

குறிப்பு: மேற்படி துணை வகுப்பு 457 நிபந்தனைகளை சுயமாக இணையத்தில் ஆய்வு செய்த பின்னர் திசைகாட்டிக்கு ஆலோசனைக்கு வருவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090





## You Can Be Me

* Become a World Class Health Professional

Average **Annual Salary** of a Healthcare professional is **Rs 750,000 per month**

**Unbelievable Cost Saving**

## STUDY - WORK - LIVE
In UK, Australia & USA

- **Bachelor of Nursing** - 3 Years in Sri Lanka + 1 year in Australia
- **Diploma of Nursing (Enrolled)** - 1 year in Sri Lanka + 15 months in Australia
- **Diploma in Physiotherapy** - 3 years in Sri Lanka
  **Pathway to MSc Advancing Physiotherapy Practice** - 1 year in UK
- **Diploma in Biomedical Sciences** - Pathway to UK & Australia
- **IVQ Specialist Diploma in Healthcare** - 6 months in Sri Lanka
  **Pathway to Level 3 qualification in UK with a paid work placement** - 15 months in UK

**FREE SEMINAR & SPOT ADMISSION**

**1st Seminar**
Date: Wednesday 6th November
Time: 9.30am - 10.30am
Venue: Udduppiddy Girl's College

**2nd Seminar**
Date: Friday 8th November
Time: 9.30am - 11.30 am
Venue: Jaffna College, 464, Hospital Road, Jaffna
(Next to Commercial Bank)

HOTLINES +94 774 142 398 | +94 773 114 381 | +94 727 115 114

IIHS International Institute of Health Sciences
"Building Caring Minds for the World"
No 704, Negombo Road, Welisara, Sri Lanka.
Tel : +94 114 65 11 44
DEAKIN University Australia · SUNY Canton · tafe South Australia
"A training institute registered with the TVEC under P02/0154"
www.iihsciences.com



Digital **இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்



WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


# வடக்கு ஆளுநர்...

துள்ளார்.

போர்முடிவடைந்து நான்கு வருடங்களைக் கடந்தும் வடக்கில் இராணுவ அதிகாரியொருவரே ஆளுநராகக் காணபடுகின்றமைக்கு எதிர்ப்பைத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர, குறிப்பாகவடமாகாண முதலமைச்சர் விக்னேஸவரன் தனது கன்னி உரையின் போது ஆளுநராக சிவில் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பாக வினவியபோதே அமைச்சர் திஸ்ஸ விதாரணமேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கில்தற்போது யுத்தம் முடிவடைந்து மக்கள் அனைவரும் நிம்மதியுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அங்கு இராணுவ அதிகாரியொருவர் ஆளுநராக இருக்கின்றமையானது உண்மையில் அங்குள்ள தமிழர்களின் சுதந்திரத்தை பாதிக்கின்றது என்றே கூறவேண்டும்.

அதுமட்டுமல்ல, வடக்கில் தற்போது இராணுவ அதிகாரியொருவர் ஆளுநராக இருப்பது அவசியமே இல்லாத ஒன்றாகும். எம்மைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு நிச்சயமாக ஆதரவை தெரிவிப்போம்.

கூட்டமைப்பு கூறுவதைப்போன்று வடக்கில் ஒரு சிவில் அதிகாரியொருவரை ஆளுநராக நியமித்தால் அது அங்குள்ள தமிழர்களுக்கு நிம்மதியும், சுதந்திரத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்களின் வேண்டுகோள் நியாயமானது.

ஆனால், இந்த மாற்றம் சம்பந்தமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானம் எடுக்க வேண்டும். அவருக்குத் தான் இவ்விடயத்தை தீர்த்து வைக்க பூரண அதிகாரம் காணப்படுகிறது.

அத்தோடு வடக்கில் அகதி முகாமகளில் வாழுகின்ற தமிழர்களை மீட்டெடுத்து அவர்களின் சொந்த வீடுகளிலேயே குடியமர்த்த வேண்டும்.

இதற்காக இராணுவத்தின் வசம் காணப்படும் தமிழர்களின் வீடுகளும், காணிகளும் மீண்டும் மக்களுக்கே கையளிக்கப்பட வேண்டும்.

தேசியப் பாதுகாப்புக் கருதி பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகள் சம்மந்தமாக இராணுவ உயர் பீடமே தீர்மானிக்க வேண்டும்என்றாலும் தேவைக்கதிகமாக இராணுவத்தின வசமுள்ள காணிகளை மீண்டும் உரியவர்களுக்கு கையளிப்பதே ஆரோக்கியமான விடயமாகும் என்றார். (செ-11)

# இனவாத மோதல்...

என்பதால் இதனை கூறுகிறேன். நாங்கள் இனவாத மோதலகள் ஏற்பட இடமளிக்க போவதில்லை.

மேற்குலக நாடுகளின் டொலர்களை நம்பிவாழும் பௌத்த பிக்குமாரே இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

நான்முஸ்லிம்மக்களின் கால்களை பிடித்து கழுவவும் தயார். இது இன ரீதியான நல்லிணக்கம் ஏற்பட்டு வரும் காலம். பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடக்கவுள்ளகாலம். ஆனால் இவற்றை சீர்குலைக்கவே இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

சமூகத்தில் நல்லொழுக்கம் சிறந்த முறையில் இருக்க வேண்டும். அதிகாரிகள் கடமையை செய்யும் போது சில அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும்.

பலவேறு அமைப்புகளை உருவாக்கிக கொண்டு மீண்டும் இனவாதத்தை தூண்டுவோர் பற்றியும் மத அடிப்படைவாதிகள் குறித்தும் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்றார். (செ-4)

# இலங்கை...

திகதிவரை இடம்பெறும் என கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கை இந்திய கடற்படைகளுக்கு இடையில், வருடாந்தம் முன்னெடுக்கப்படும் இந்த கூட்டுப் பயிற்சிகள் கடந்த வருடம் திருகோணமலை கடற்பரப்பில் இடம் பெற்றதாகவும் கொமான்டர் கோசல வர்ணகுலசூரிய மேலும்சுட்டிக்காட்டினார். (செ-


## வாடகைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மித்த தெல்லிப்பளை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட சமையலறை, சாப்பாட்டறையுடன் மேலும் நான்கு அறைகள் கொண்ட தளபாடங்களுடன் கூடிய வசதியான வீடு. இதற்கு மேலதிகமாக வீட்டுடன் இணைந்த TUITION நடத்தக் கூடிய 34'-0" x 11'-6" கட்டட வசதியும் உண்டு. வீட்டை நன்கு பேணக் கூடிய குடும்பத்திற்கு மட்டும். உடனடியாகக் குடிபுகக் கூடிய நிலையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
**0773753094, 0772035419**
(4412)



## வேலைவாய்ப்பு

**அரச துறை:** மதுவரி காவலர், பரிசோதகர், புகையிரத பாதுகாவலர், விளையாட்டுத் துறை அமைச்சில் 7 பதவி நிலைகள், மக்கள்வங்கியில் முகாமைத்துவப் பயிலுநர், மொழி பெயர்ப்பாளர், மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு–இலங்கை பத்திரிகை பேரவையில் முகாமைத்துவ உதவியாளர் உட்பட 5 பதவிநிலைகள், பாராளுமன்றத்தில் வரவேற்பு அலுவலர் உட்பட்ட பதவிகள் மற்றும் நிலஅளவைத் திணைக்களம், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் போன்றவற்றிலும்...

**தனியார் துறை:** சிங்கர், ஹேமாஸ், சேற்றிஸ் லங்கா, எயார்ரெல், TVS Lanka (PVT) Ltd போன்ற கம்பனிகளிலும்...
மற்றும் சேவ் த சில்ரன் போன்ற அமைப்புகளிலும்...

**தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு...**

**கோலாசிற்றி** தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 021 320 2787
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்
(4415)



## SHARP PHOTO COPIERS

SHARP நிழற்பட பிரதி இயந்திரங்கள் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விலையில்

இதோ இப்பொழுது புத்தம் புதிய Model ஒன்றை அறிமுகப்படுத்துகிறோம்.




- நிமிடத்திற்கு 20 பிரதிகள் மற்றும் பிறிண்ட்கள்
- Black / White Scanner
- Double Tray - இரட்டைத் தட்டுக்கள்

வேகமானது · இலகுவானது · வசதியானது

01 வருடம் / 60,000 பிரதிகளுக்கான உத்தரவாதம்.
01 வருடத்திற்கான இலவச திருத்தல் சேவை.

இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

**8 வருட காலமாக தங்கள் நம்பிக்கையை வென்ற**
**BROWN & COMPANY PLC - IBS** இன் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

# டிஜிட்டல் எலக்ரோணிக்ஸ்

(C-5325)

62/16, ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கி முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பேசி : 021 222 4040 / 0776623824


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.